விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5088)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 03 வியாழக்கிழமை (17.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 029

## அரசியலமைப்பை கொண்டுவர அரசுக்கு உரிமை இல்லை

### எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொலன்னறுவையில் நேற்று இடம் 23

## ஐ.நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்த தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும்

### பிரித்தானிய அமைச்சர் உறுதி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களை நடைமுறைப்படுத்த தொடர்ந்தும் ஆதரவு வழங்கவுள்ளதாக பிரித்தானியாவின் ஆசிய பசுபிக்கிற்கான அமைச்சர் மார்க் பீல்ட் உறுதியளித்துள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் கரு ஜயசூரியவுடனான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இந்த விடயத்தை தெரி 23



## மகாநாயக்கர்களின் ஆசீர்வாதமில்லாமல்

# அரசியலமைப்பு வரைபை சமர்ப்பிக்க முடியாது

### மகாநாயக்கர்கள், சிங்கள புத்திஜீவிகளை உள்ளடக்கிய புத்தசாசன செயலணி அதிரடி அறிக்கை

(கொழும்பு)

மகாநாயக்கர்களின் ஆசீர்வாதமில்லாமல் புதிய அரசியலமைப்பு வரைபை பாராளுமன்றில் சமர்ப்பிக்க முடியாது என புத்தசாசன செயலணி அதிரடியாக அறிக்கை வெளியிட்டுள்ளது. நாட்டிலுள்ள முக்கியமான மகாநாயக்கர்கள், சிங்கள புத்திஜீவிகளை உள்ளடக்கிய புத்தசாசன செயலணியின் 29 உறுப்பினர்கள் இதில் கையொப்பமிட்டுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பு நாட்டை பிரிக்கும்

### எதிர்க்கட்சி தலைவர் மகிந்த

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பினைத் தயாரிக்கும் செயற்பாடு நாட்டைப் பிரிக்கும் முயற்சி என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொலனறுவையில் நேற்று புதன்கிழமை இடம் 23

## இலங்கை - பிலிப்பைன்ஸ் இடையே ஐந்து

### உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையே ஐந்து புரிந்துணர்வு உடன்படிக்கைகள் நேற்று கைச்சாத்திடப்பட்டன.

பிலிப்பைன்ஸுக்கான நான்கு நாள் அரசமுறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி 23

## விபத்துக்குள்ளான மாணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

முச்சக்கரவண்டிகள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 12 வயது மாணவன் ஒருவன் படுகாயமடைந்து சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளான்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 7இல் கல்வி 24

## வடக்கிலிருந்து போதை முற்றாக ஒழிக்கப்படும்

### ஆளுநர் சுரேன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலிருந்து போதைப்பொருள் பாவனை முற்றாக ஒழிக்கப்படும் என ஆளுநர் சுரேன் ராகவன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நயினை நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு நேற்று புதன்கிழமை விஜயம் செய்த ஆளுநர் அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார். 23

### அநுராதபுர விமானதளம் மீதான தாக்குதல்

## முன்னாள் புலி உறுப்பினர்கள் இருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(கொழும்பு)

அநுராதபுரம் விமானப்படைத் தளத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியமைக்கு உதவினார்கள் என்ற குற்றத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் வான் பிரிவின் முன்னாள் உறுப்பினர்கள் இருவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.


இருவர் மீதான சிறைத் தண்டனையை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த மேல் நீதிமன்ற 23

## ஆளுநர் சுரேன் ராகவனுக்கும் சி.வி.விக்னேஸ்வரனுக்குமிடையில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குமிடையிலான சந்திப்பு ஆளுநருடைய யாழ்ப்பாண உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் அரசியல் மற்றும் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)



## வடக்கு அபிவிருத்திக்கு 2 ஆயிரம் மில்லியன் ஒதுக்க

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வடக்கில் துரித அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு 23

## புதிய அரசியல் யாப்பில் மாகாணத்துக்கு வழங்கிய அதிகாரங்களை மத்திய அரசால் திரும்பப்பெற முடியாது - சுமந்திரன்

(கரணவாய்)

மாகாணசபைக்கு வழங்கிய அதிகாரங்களை மத்திய அரசால் திரும்பப் பெறமுடியாதவாறே புதிய அரசியல் யாப்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறைக் கைதிகள் மீது அதிகாரிகள் சித்திரவதை

## விசாரணைக்கு அமைச்சர் தலதா உத்தரவு

(கொழும்பு)

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் தலதா அத்துகோரளவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான அறிக்கையை எதிர் வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் வழங்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அமைச்சரால் உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல் தெனிய தலைமையிலான மூவரடங்கிய குழு இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைக்கு அமைவாக அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக அந்த அமைச்சு கூறியுள்ளது.

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரிகளினால் கைதிகள் அடித்து சித்திரவதைக்கு உட்படுத்தும் அதிர்ச்சி காணொளி ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் தலைவர் சட்டத்தரணி சேனக்க பெரேரா வேண்டுகோள் விடுத்ததுடன், குறித்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-3)

# த.தே.கூவின் பணயக் கைதியாக அரசாங்கம் மாறியுள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணயக் கைதியாக அரசாங்கம் மாறியுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கூட்டமைப்பின் இணக்கப்பாடு இல்லாமல் வடக்கில் எந்த நடவடிக்கையையும் அரசாங்கத்தினால் மேற்கொள்ள முடியாது. அத்துடன் வடக்கு அபிவிருத்தி அமைச்சும் கூட்டமைப்பின் கீழே இருக்கின்றது.

வடக்கு அபிவிருத்தி அமைச்சை அவர்களுக்கு கீழ் வைத்துக்கொண்டு இன்று வடக்கில் கூட்டமைப்பு இனவாத. பிரிவினைவாத பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றது.

கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் முல்லைத்தீவு நாயாறு விகாரைக்குள் பலாத்காரமாக நுழைந்து அங்கிருப்பவர்களை எச்சரித்துள்ளனர்.

அத்துடன் அங்கு கோயில் கட்டப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்படுவதில்லை. சுமந்திரனின் கட்டளையின் பிரகாரமே வடக்கில் பொலிஸாரும் செயற்படுகின்றனர். அரசாங்கம் கூட்டமைப்பின் பணயக்கைதியாக இருக்கும் வரைக்கும் இந்நிலை தொடரும் என்றார். (ம-3)

# ஒற்றையாட்சி கொள்கையை த.தே.கூ ஏற்றுக் கொண்டுள்ளது

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சி கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவளிப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோரும் அரசமைப்புகளை தயாரித்தனர். ஆனால் அவ்வேளை தமிழ்த் தரப்பினர் ஆதரவளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல்தடவையாக தமிழ் கட்சிகள் புதிய அரசமைப்பிற்கு ஆதரவளிக்கின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமஷ்டி தொடர்பிலோ வடக்கு, கிழக்கு இணைப்பிலோ எந்த பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சி கொள்கைக்கு இணங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதிய அரசமைப்பை முன்வைக்கவில்லை அது குறித்த யோசனையே முன்வைக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# விபத்தில் காயமடைந்த பெண் 10 நாட்களின் பின்னர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த பெண் ஒருவர் 10 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி நாவற்காட்டை சேர்ந்த குணராசா அஜந்தி (வயது 40) என்ற பெண்ணே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் தனது உறவினருடன் கடந்த 6 ஆம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை வழியாக ஆவரங்கால் நோக்கி செல்வதற்கு வீதியின் இடது பக்கம் மோட்டார் சைக்கிளில் நின்றுள்ளார்.

பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவர்களை மோதியதில் இருவரும் கீழே விழுந்து படுகாயமடைந்தனர். இருவரும் உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேற்குறித்த பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

# மரண அறிவித்தல்



## சிவதாஸ் சர்வேஸ்வரி (வேவி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வாழ்விடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட நாதஸ்வர வித்துவான் சிவதாஸ் அவர்களின் மனைவி சிவதாஸ் சர்வேஸ்வரி (வேவி) அவர்கள் நேற்று (16.01.2019) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் - சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற கணேசபிள்ளை - நாகரத்தினம் தம்பதிகளின் மூத்த மருமகளும், கமலேஸ்வரி, நடராசசுந்தரம் (கனடா), செல்வராசா (தில்லை), சுதாகரன் (சுதா-கனடா), ஜெயலட்சுமி (ஜெயா-கனடா), சுதர்சன் (தாஸ் - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசந்திரிகா (சுவர்ணா), ரவிச்சந்திரிகா (கௌரி - கனடா), பிரபாகரன் (பிரபா), பாலசிந்துயா (சிந்து), பிரசாத், பிரசாந்தி (சாந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷன், மாதங்கி, வேந்துஷன், பாதுஷன், துஸ்யந்தன், பிரணவன், இசானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
(பிரபா, பிரசாத்)


## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள/ பழக விரும்பும் ஆண்/ பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் (பெண்) வயது (18-25) உடன் தேவை.

**தொடர்பு: 0777486093, 021 321 3117**

(சி-5170)


## யா/நல்லூர் மங்கையர்க்கரசியின் கண்ணீர் அஞ்சலி

### திருமதி சியாமளா முத்துக்கிட்டினர்




எமது வித்தியாலயத்தின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி சியாமளா முத்துக்கிட்டினர் அவர்களின் திடீர் மறைவினால் மனம் கலங்கி நிற்கின்றோம். அமரரின் குடும்பத் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அவரது ஆத்மா நல்லை கந்தன் தாள் சேர அஞ்சலி செய்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# நாட்டுக்கு ஆக்கபூர்வமான அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவது அவசியம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொலன்னாவை)

அநாவசிய சிந்தனைகளை விடுத்து நாட்டு மக்களுக்கு ஆக்கபூர்வமான அரசியலமைப்பொன்றைப் பெற்றுக் கொடுப்பது அவசியமென மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை பகுதியில் தமது அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்படவுள்ள பாலங்கள் மற்றும் வாய்க்கால்களுக்கு நேற்று அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த செயற்றிட்டத்திற்காக 50 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, நாட்டிலுள்ள சிங்கள மக்களிடையே பொய்யான தேசப்பற்றைக் காட்டி அம்மக்களை அச்சத்திற்குள்ளாக்குகின்றனர்.

அத்தகைய அச்சத்தையும் பயத்தையும் உபயோகப்படுத்தி தமது அரசியலையும் வாக்குரிமையையும் பெற்றுக்கொள்வதற்கு சில சக்திகள் முயற்சிக்கின்றன. எனினும் பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடனேயே அரசியலமைப்பு திருத்தத்துக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முறையே அனைவரின் இணக்கப்பாடுகளைப் பெற்று அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் அரசியலமைப்புகள் அந்தந்த கட்சிகளின் தேவைகளைக் கருத்திக்கொண்டே உருவாக்கப்பட்டு வந்துள்ளன. நாட்டின் மிகப் பிரதானமான சட்டமாகவுள்ள அரசியல் அமைப்பானது அனைவரின் விருப்பம், இணக்கப்பாடு, ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட வேண்டும்.

அந்த நோக்கத்திலேயே இம்முறை உச்சளவில் அனைவரதும் இணக்கப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. எமது நிலைப்பாட்டை நாம் மிகத் தெளிவாகவும் எழுத்து மூலமாகவும் அறிவித்துள்ளோம். அந்த அரசியல் அமைப்பு ஜனநாயகம் மற்றும் ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டதாக அமைவது அவசியம். இவையிரண்டிலும் ஒன்று சமனில்லாத போது அது பலவீனமானதாகவும் ஸ்திரமற்றதாகவும் சிக்கலுக்குள்ளானதாகவும் அமையும் என்பதே எனது கருத்து என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




(கேலிச்சித்திரம்)

# ஸ்திரமான அரசை உருவாக்கும் பலம் மகிந்தவுக்கு மாத்திரமே உண்டு

## அநுர பிரியதர்ஷன கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்கும் பலம் மகிந்த ராஜபக்ஷவுக்கு மாத்திரமே உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

புதிய அமைச்சர்கள் நியமனங்களில் இலங்கை சர்வதேசத்தின் அரசியல் முறைமைகளையும் விஞ்சிவிடும் என நினைத்த கணப்பொழுதில் ஒருவர் அமைச்சராக மற்றும் அமைச்சர் அந்தஸ்து இல்லாமல் என பதவிகளை பெற்றுக்கொண்டுள்ளார்.

ஆனால் என்னவிருந்தும் பயனென்ன. ஸ்திரமான நிலையான அரசாங்கமொன்றை ஐக்கிய தேசியக் கூட்டணியால் உருவாக்கிட முடியவில்லையே. என அவர் தெரிவித்தார்.

நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# சம்பந்தனுக்கு ஏற்ற அரசியலமைப்பு வர நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்

## அமரவீர திட்டவட்டம்

(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே, புதிய அரசியல் அமைப்பு கொண்டுவரப்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சூரியவெளி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த, மகிந்த அமரவீர இதனை தெரிவித்தார்.

இரா.சம்பந்தன் போன்றோருக்கு ஏற்றவகையில் அரசியலமைப்பை மறுசீரமைக்க நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் இடமளிக்க மாட்டோம்.

புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்பட மாட்டாது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.



அரசியலமைப்பை கொண்டுவர முயற்சிக்கின்றபோதும், ஏனைய தரப்பினர் அதற்கு இடமளிக்கவில்லை என்று காண்பிப்பதற்கே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# எவ்வித காயங்களையும் ஏற்படுத்தாமல் புற்றுநோயை அகற்றிச் சாதனை



(ஹோமாகம)

ஹோமாகம வைத்தியசாலையில் அபூர்வ சத்திர சிகிச்சை ஒன்றை இலங்கை வைத்தியர்கள் செய்து சாதனை படைத்துள்ளனர்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த, நபர் ஒருவருக்கு தொண்டைக்கு அருகில் புற்றுநோய் ஏற்பட்டதன் காரணமாக உணவு அருந்த, நீர் பருக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் உயிரிழக்கும் ஆபத்து ஏற்பட்டது.

குறித்த நபருக்கு எவ்வித வெட்டுக்காயங்களையும் ஏற்படுத்தாமல், அந்த புற்றுநோயை அகற்றுவதற்கு இலங்கை வைத்தியர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

டிரான்ரல் எண்டோஸ்கோபிக் டிரான்ஸ்டோனிக் (Transoral endoscopic transonic)தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த சத்திர சிகிச்சைக்குள்ளான நோயாளி இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் உடல்நிலை தேறியுள்ளார். இந்த சத்திர சிகிச்சை இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான சத்திர சிகிச்சையாக கருதப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அவுஸ்திரேலியாவில் வாழ இனி அனுமதிக்க முடியாது



(மல் பேர்ன் )

நாடுகடத்தப்படவுள்ள நிலையில் கடந்த 10 மாதங்களுக்கும் மேலாக மெல்பேர்ன் தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நடேசலிங்கம்-பிரியா குடும்பத்தை அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதிக்க முடியாது என்றும், அவர்கள் நிச்சயம் நாடுகடத்தப்படுவார்கள் என்றும் அந்நாட்டு உள்துறை அமைச்சர் பீற்றர் டுட்டன் தெரிவித்துள்ளார்.

தமிழ் புகலிடக்கோரிகையாளர்களான நடேசலிங்கம்-பிரியா குடும்பம் தம்மை அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதிக்குமாறு கோரி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதையடுத்து, அவர்களை பெப்ரவரி முதலாம் திகதிக்கு பின்னர் நாடுகடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந் நிலையில், அவர்களின் நாடுகடத்தலைத் தடுத்து நிறுத்தி, அவர்களை தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை நிராகரித்துள்ள அமைச்சர் பீற்றர் டுட்டன், உண்மையான அகதிகள் என இனங்காணப்பட வில்லை எனத் தெரிவித்துள்ளார்.

புகலிடம் கோரும் நோக்கில் நடேசலிங்கமும் பிரியாவும் தனித்தனியாக கடந்த 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்றடைந்தனர்.

அவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் பிறந்த 2 வயது மற்றும்ஒருவயதுடையபெண் குழந்தைகள் உள் ளன.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இந்தக் குடும்பம் பலகாலமாக வாழ்ந்து வந்த குயின்ஸ்லாந்திலிருந்து நாடுகடத்த முற்பட்ட வேளையில் சட்டநடவடிக்கை காரணமாக குறித்த முயற்சி இறுதி நேரத்தில் தடுக்கப்பட்டது.

இருப்பினும், நடேசலிங்கம்-பிரியா குடும்பத்தினர் தம்மை அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதிக் குமாறு கோரி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை கடந்த டிசெம்பர் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் அதனை நிராகரித்து, அவர்களை நாடு கடத்துமாறும்உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தோனிக்கு 'தொல்லை' கவாஸ்கர் 'கவலை'



தோனி

## ஹோலி 'சல்யூட்'

"தோனி மனதில் என்ன உள்ளது என்பது அவருக்கு மட்டுமே தெரியும். தேவையான நேரத்தில் வேகமாக ஓட்டங்கள் சேர்ப்பதில் வல்லவர். தோனிக்கு தலை வணங்குகிறேன் ('சல்யூட்')." என ஹோலி தெரிவித்தார்.

இந்திய அணியின் 'சீனியர்' தோனி (வயது-37). விக்கெட் காப்பில் கலக்கும் இவர், துடுப் பாட்டத்தில் சமீபகாலமாக சொதப்பி வருகிறார். களத்தில் அதிக பந்துகளை வீணடிப்பதால் மற்றைய வீரர்களுக்கு சிக்கல் ஏற்படு வதாக கூறப்படுகிறது.

சிட்னியில் நடந்த முதல் போட்டியில் தோனி, 96 பந்துகளில் 51ஓட் டங்கள் எடுக்க, கடும் விமர்சனம் ஏற்பட்டது. 2ஆவது ஒரு நாள் போட்டியில் பழைய தோனியாக மீண்டும் கலக்கினார். சூழ்நிலைக்கு ஏற்ப வேக மாக ஓட்டங்கள் சேர்த்தார். லயன் பந்தில் சிக்சர் அடித்த இவர், பெஹ்ரன்டர்ப் வீசிய கடைசி ஓவரின் முதல் பந்தில் சிக்சர் அடித்து, போட்டியை வெற்றிகரமாக 'பினிஷிங்' செய்து கொடுத்தார். 54 பந்துகளில் 55 ஓட்டங்கள் சேர்த்த இவர், தன் மீதான விமர்சனங் களுக்கு மீண்டும் பதிலடி கொடுத்தார்.

இதுகுறித்து அணித் தலைவர் ஹோலி கூறியதாவது,

இந்திய அணியின் ஒரு அங்கம் தோனி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சமீபத்தில் போட்டிகளில் பங் கேற்காமல் இருந்தால், அடுத்து களமிறங்கும் போது 'போர்முக்கு' திரும்ப சிறிது கால அவகாசம் தேவைப்படும். தற்போது தோனி சிறப்பாக செயற்பட்டது இப்படித்தான்.

தோனியை பொறுத்தவரையில் போட்டியை கடைசி வரை கொண்டு செல்வார். ஆனால் இவரது மனதில் என்ன உள்ளது என்பது அவருக்கு மட்டும் தான் தெரியும். போட்டி குறித்தும், எந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதை சிறப்பாக திட்டமிடுவார். தேவையான நேரத்தில் பவுண்டரி, சிக்சர் என விளாசு வார். தோனிக்கு தலை வணங்குகிறேன். இவ்வாறு ஹோலி கூறி னார்.

இந்திய அணியின் 'சீனியர்' தோனியை அவரது போக்கில் விட்டு விடுங்கள், அவரது அனுபவத்தை எந்த வகையிலும் கணக்கிட முடியாது." என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் 'சீனியர்' விக்கெட் காப்பாளர் தோனி (வயது-37), 'ரி20' (2007), ஒருநாள் (2011) என இந்தியாவுக்கு இரு உலக கிண்ணங்களை வென்று கொடுத்தார். சமீபகாலமாக துடுப்பாட்டத் தில் தடுமாறுகிறார். சிட்னி ஒருநாள் போட்டியில் 96 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுக்க, விமர்சனங்கள் அதிகமானது. அடுத்து அடிலெய் டில் 54 பந்துகளில் 55 ஓட்டங்கள் விளாசி வெற்றி பெற்றுக் கொடுத்தார்.

இதுகுறித்து முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் கூறியதாவது.

தோனியை பொறுத்தவரையில் தொடர்ந்து சிறப்பாக செயற்படு வார். அவரை யாரும் தொல்லை செய்யாமல் அவரது போக்கில் விட்டுவிட்டாலே போதும். தவிர அவர் இளம் வீரர் அல்ல. இதனால் நிலையான ஆட்டத்தை தொடர்ந்து அவரிடம் எதிர்பார்க்க முடியாது. இதை எல்லோரும் சற்று பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஆனால் தோனி இந்திய அணியின் வியக்கத்தக்க சொத்தாக இன்னும் இருந்து வருகிறார். துடுப்பாட்ட வீரர்களின் மனநிலையை நன்கு அறியும் திறன் படைத்த இவர், இதற்கேற்ப எப்படி பந்து வீச வேண்டும் என தொடர்ந்து பந்துவீச்சாளர்களுக்கு 'அட்வைஸ்' கொடுக்கிறார்.

ஹோலி பவுண்டரி எல்லைக்கு அருகில் களத்தடுப்பு செய்யும் நிலையில், மற்றைய வீரர்கள் எங்கு நிற்க வேண்டும் என்பது குறித்த ஆலோசனையும் தோனி வழங்குகிறார். இவ்விடயத்தில் ஹோலி, தோனி மீது முழுமையாக நம்பிக்கை வைத்துள்ளார். இவ்வாறு கவாஸ்கர் கூறினார்.

### தைத்திருநாளை முன்னிட்டு

## நொதேண் வி.க நடத்தும் மரதன் ஓட்டப் போட்டி

தைத்திருநாளை முன்னிட்டு நல்லூர் நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் மரதன் ஓட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

மேற்படி மரதன் ஓட்டப் போட்டியானது எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 19.01.2019 மதி யம் 12 மணிக்கு முன்னதாக தங்களது பெயர்களை பதவி செய்வது டன் 20.01.2019 காலை 5.30 மணிக்கு முன்பாக மருத்துவ சான் றிதழுடன் கல்வியங்காட்டுச்சந்திக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 0768273570, 0750410487 என்ற தொலைபேசி இலக்கத்தை அணுகவும். (ம)

# 3ஆவது சுற்றில் பெடரர் ஆஸி., ஓபனில் அபாரம்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் வெற்றி பெற்றார்.

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென் னிஸ் தொடர் மெல் போர்னில் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றை யர் பிரிவு இரண்டாவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் பெட ரர், பிரிட் டன் வீரர் ஈவன்சை சந் தித்தார். முதல் இரு செட் களும் கடும் சவாலாக அமைய 'டை பிரேக்கர்' வரை சென்று பெடரர் 7-6, 7-6 என கைப்பற்றினார். மூன்றாவது செட்டை பெடரர் 6-3 என எளிதாக வசப்படுத்தினார். முடிவில் பெடரர் 7-6, 7-6, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார்.

மற்றைய போட்டிகளில் இத்தாலியின் ஆன்ட்ரியாஸ் செப்பி, செக்குடியரசின் தோமஸ் பெர்டிச், குரோஷியாவின் மரின் சிலிச், ஸ்பெயினின் பெர்ணான்டோ வெர்டா ஸ்கோ வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு நுழைந்தனர்.

பந்தொன்றை மீளத் திருப்பியனுப்பும் பெடரர்

# ஸ்ரெய்ன் ஓய்வு ஒலிவர் வாய்ப்பு



பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக் கான தென்னாபிரிக்க அணியில் ஸ்ரெய்ன், குயின்ரனுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஒலிவருக்கு அறிமுக வாய்ப்பு கிடைத்துள்ளது.

தென்னாபிரிக்கா சென்று ள்ள பாகிஸ்தான் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகளுக்கும்இடை யிலான முதலாவது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் 19 ஆ ம திகதி போர்ட் எலிசபெத்தில் நடக்கிறது.

இத்தொடருக்கான முதலிரண்டு போட்டிகளுக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 'சீனியர்' வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன், குயின்ரன் டி கொக்கிற்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக் குப்பதில் ஒலிவர், மார்க்ரம் சேர்க்கப்பட்டுள்ளனர். குயின்ரனுக்குப்பதில் கிளாசன் விக்கெட் காப்பாளராக செயற்பட உள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் (3 போட்டி, 24 விக்..) அசத்தியதால் ஒலி வருக்கு ஒரு நாள் தொடரில் அறிமுக வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அணி விபரம்: டு பிளசி (அணித் தலைவர்), அம்லா, மார்க்ரம், ஹென்ரிக்ஸ், இம்ரான் தாகிர், கிளாசன், மில்லர், டேன் பீட்டர்சன், பெலுக்வாயோ, பிரிட்டோரி யஸ், ரபாடா, ஷாம்சி, ஒலிவர், டுசன்

ஒலிவியர்

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
# பொது அறிவித்தல்-2019

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் அல்லது தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

1. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்- 2019

இப்பிரதேச எல்லைக்குள் நிரந்தர வியாபாரம் செய்வோர், நடமாடும் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்கு பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தினை உப அலுவலகங்களில் 2019ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி அப்பகுதி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளவும். அவ்வாறு பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம். 2019

1533/16 ஆம் இலக்க 25.01.2019 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தினை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்து புதுப்பித்தல் வேண்டும்.

3. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் புதிய கட்டுமானங்கள் அல்லது திருத்தங்கள் குழாய்க்கிணறு அமைத்தல் மற்றும் அனைத்து கொங்கிறீற் வேலைகளுக்கும் பிரதேச சபையின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடுகள் இன்றி அகற்றப்படும். மேலும் கட்டடம் அமைக்கப்படும் காணியின் 1/3 பகுதி கட்டாயமாக நிலப்பகுதியாக அமைதல் வேண்டும்.

4. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல்.

2019ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, மிருகவரி உரிமங்களை 31.03.2019ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. வீடுகள்,கட்டடங்கள், மதில்கள், மலசல கூடங்கள் அமைத்தலும் புதுப்பித்தல் திருத்த வேலைகள் செய்தலும்.

எமது நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு- 268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்பத்திரங்களை அப் பகுதி உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

6. விளம்பரங்களை காட்சிப்படுத்தல்.

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளில் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அனுமதியினை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய நிறுவனங்களில் விளம்பரங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும்.

7. மரக்கறி, மீன், இறைச்சிவகை விற்பனை தடை செய்தல்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 01 km தூரத்திற்கு வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

8. படவரைஞர் பதிவு செய்தல்/ புதுப்பித்தல்.

2017ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே படவரைஞராக பதிவு செய்தவர்களும் பதிவுகளை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்.

9. பொது இடங்களிலும் மற்றும் .வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படின் சுற்றாடல் பொலிஸ் மூலம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. கழிவகற்றல் சேவை.

தங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேசசபையில் கட்டணம் செலுத்தி சபையின் கழிவகற்றும் வாகனங்கள் மூலம் அகற்றிக்கொள்ள முடியும். மேலும் கழிவுப்பொருட்களில் பிளாஸ்டிக், கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்றவற்றினை வேறுபடுத்தி சபையின் உதவியுடனும், உக்கும் கழிவுகளை தாங்களாகவே அகற்றிக்கொள்ளல் வேண்டும்.

11. நீர் வழங்கல் சேவை.

பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளுக்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரை பெற்றுக்கொள்ள முடியும்.

12. தரகர் முறை நீக்கல்

எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

13. கனரக வாகன சேவைகள்

பக்கோ,கலிபவுசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகள் பெறுவதற்கு சபையில் சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

14. பொதுச் சுகாதாரம் பேணல்.

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்,பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்புரவு செய்து பொதுச் சுகாதாரம் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள் எதுவும் காணியில் இல்லாதொழிக்க வேண்டும்.

15. சந்தை வியாபாரம் தொடர்பானது.

சந்தைகளில் உற்பத்திப் பொருட்களுக்காக எதுவித கழிவுகளும் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகை வரியானது 4% இற்கு மேற்கொள்ளப்படலாகாது சந்தை சுற்றாடல் பகுதியில் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நிறுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தரித்து விடப்படல் வேண்டும்.

16. பொது வழியின் பயன்பாட்டை இடையூறு செய்யும் வகையில் அலைந்து திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்துதல்.

பொது வழி மீது அல்லது பொது வழியின் அருகில் கால்நடைகளை கட்டுதல் அலைந்து திரிகின்ற வகையில் கால்நடைகளை விடுதல் போன்ற செயற்பாடுகள தவிர்க்கப்படல் வேண்டும். மற்றும் அவ்வாறான குற்றங்களுக்காக பிடிக்கப்படும் கால்நடைகளை பிடித்தல், பராமரித்தல் செலவுகளுக்காக சபையால் காலத்துக்கு காலம்-நிர்ணயிக்கப்படும் கட்டணங்களை செலுத்த தவறின் அல்லது கால்நடைகளை உரிமை கோராது விடின் இவ்வாறான கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

17. பொலித்தீன் பாவனையை தடைசெய்தல்.

பிளாஸ்ரிக் பைகள், ஒருநாள் பாவனைக்கான பிளாஸ்ரிக் குவளை, உணவுப்பெட்டிகள், தட்டுக்கள் போன்ற பிளாஸ்ரிக் பொருட்கள் பயன்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் 1980 (47) தேசிய சுற்றாடல் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

(C-5169) **சுப்பிரமணியம் சுரேன், தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

## இராசி பலன்

**மீனம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், செய்தொழில் முன்னேற்றமுண்டு, முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**மேடம்**
காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**இடபம்**
பெருமைகள் வந்து சேர பெருமாளை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்**
எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**கும்பம்**
பெற்றோர் மீது பிரியம் கூடும், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு,வாகன சுகமுண்டு,நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

**இராசி பலன்** — கிரகநிலை: செவ்; சந்; ராகு; கேது, புத, சூரி; சனி; குரு.சுக்
சந்திராஷ்டமம்: அனுசம்

17.01.2019
தை 03, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 6.56 மணிக்கு
கார்த்திகை முற்பகல் 10.21 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
ஏகாதசி விரதம்
வளவன்

**கடகம்**
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்,பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**மகரம்**
போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு**
கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**விருச்சிகம்**
மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, வழிபாடு களில் நம்பிக்கை கூடும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி**
மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு.

# தைப்பூச மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச மஞ்சத்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து (1008) ஆயிரத்து எட்டு பால்குடப் பவனி ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடைந்து ஆறுமுகப் பெருமானுக்கு பால் அபிஷேகம் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணியளவில் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று இரவு 7மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதிவலம், பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் பல பிரதேசங்களிலிருந்தும் வருவார்கள் என்பதால் அடியார்களின் வசதிகருதி வாகனப்பாதுகாப்பு நிலையங்கள், சாரணர்படை, பொலிஸ் பாதுகாப்பு,குடிநீர் வசதி, தங்குமிடவசதி ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன.

பால்குடம் எடுக்கும் அடியவர்கள் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

தைப்பூசத்தன்று மதியம் பூசையை தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (இ-78)

# நீதிநூல்மனனப்போட்டியும் செயல்முறைப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வருடாந்தம் நடத்தி வரும் நீதிநூல் மனனப் போட்டி, செயல்முறைப் போட்டி ஆகியவற்றை இவ்வருடமும் நடத்தவுள்ளது.

தரம்-2,3 மாணவர்களுக்கு நீதிநூல் மனனப் போட்டியும், கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம்பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு எனும் இரு பிரிவுகளில் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நீதிநூல் மனனப்போட்டி பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியும், செயல்முறைப் போட்டி பெப்ரவரி மாதம் 17 ஆம்திகதியும் நடைபெறவுள்ளன. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 25 ஆம் திகதியாகும்.

போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசில்கள் 2019 சிவராத்திரி தினத்தன்று வழங்கப்படும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம், இல.82 நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக்கழகத் தின் பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (இ-7)

# மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்கவும்


## நகர சபை உறுப்பினர் ஜெயக்குமார் கோரிக்கை

(சாவகச்சேரி)

யாழ். மாவட்ட செயலகத்தால் சாவகச்சேரி நகரசபையில் அமைக்கப்பட்டு வந்த மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சி மக்கள் உள்ளிட்ட நகர.பிரதேச சபைகள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக மலக்கழிவுகளை அப்புறப்படுத்தல் மற்றும் அதனை உரிய இடத்தில் கொட்டுதல் ஆகிய பிரச்சினைகள் காணப்படுகின்றன.

தென்மராட்சிப் பகுதியில் மலக் கழிவுகளை கொட்ட இடமில்லாமையால் அதிக பணம் செலவழித்து யாழ். மாநகரசபையின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்குக் காரணம் சாவகச்சேரி நகர சபையில் அமைக்கப்பட்டு வந்த மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் இடை நடுவில் விடப்பட்டமை தான்.



42 மில்லியன் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு முடிய வேண்டிய குறித்த வேலைத் திட்டம் இன்றுவரை நிறைவடையவில்லை. மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலையின் வேலைத்திட்டங்கள் நிறைவடைந்தால் சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதி மட்டுமல்லாமல் ஏனைய பகுதிகளிலிருந்தும் மலக்கழிவுகளை அப்புறப்படுத்தக் கூடியதாக இருப்பதுடன், சபை அதன் மூலமாக வருமானம் ஈட்டக்கூடியதாகவும் இருக்கும்.

ஆகவே இடைநடுவில் விடப்பட்டுள்ள குறித்த கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும். சபையில் பேசப்படும் விடயங்கள் வெறும் பேச்சளவிலேயே விடப்படுகிறது.

சபையில் பேசப்படும் விடயங்களை நடை முறைப்படுத்தாமல் சபையில் பேசி எந்தப் பிரயோசனமும் இல்லை.

சபையில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படுவதில்லை என பொதுமக்களுக்கு தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே தயவு செய்து சபையில் பேசப்படும் விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த ஒரு உத்தியோகத்தரை நியமிக்க வேண்டும். சில விடயங்கள் பொதுமக்கள் மத்தியில் சபையைப் பலவீனப்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை உள்ளிட்ட மூன்று சபைகளில் அமைக்கப்பட்டு வந்த மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் ஒப்பந்தக்காரர்களின் தவறு காரணமாக இடை நடுவில் கைவிடப்பட்டிருப்பதாகவும்,அதன் காரணமாக தொழிற்சாலையில் பொருத்தப்பட கொண்டுவரப்பட்ட இயந்திரங்களும் திரும்பப் பெறப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-30)

# செபஸ்ரியார் ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகிய குருநகர் புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 20 ஆம்திகதி நிறைவடையவுள்ளது . இதில் நாளை மறுதினம் 19 ஆம் திகதி நற்கருணைப்பெருவிழா மாலை 5 மணிக்கு செபமாலையுடனும் ஆரம்பமாகும். இறுதி நாள் திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கும் திருச்செபமாலை மாலை 5 மணிக்கும் அதனைத் தொடர்ந்து திருச் சொருப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளது. (இ-5-106)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பள்ளம் புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நிலைய மண்டபத்தில் தலைவர் சொ.சிவயோகலிங்கம் தலைமையில் நடைபெறும் (இ-5)

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிட்ஸ் பார்க் மாதிரி முன்பள்ளியின் அங்குரார்ப்பண விழாவும் கால்கோள் விழாவும் எதிர்வரும் 21 ஆம் திகதி திங் கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாதிரி முன்பள்ளி வளாகத்தில், ஓய்வுநிலை பிரதி அதிபர் இ.சேதுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஓய்வு நிலை அதி பரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க் பணிப்பாளருமான அ. பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக சிறப்பு பொது வைத்திய ஆலோசகர் (U.K) டாக்டர். தேவாநாதன், யாழ். மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன், ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

• • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

யாழ். உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை கால்கோள் விழாவும் சின்னம்சூட்டலும் இன்று 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதி பர். இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ. தயாபரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் பா. மகாலிங்கம், வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் க.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

• • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்வெட்டித்துறை இமையாணன் அ.க.த. வித்தியாலயத்தின் கால் கோள் விழா இன்று 17 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) க.சிவம் கலந்து கொள்வார். (இ-5)





சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு முன்பாக லயன்ஸ் கழகத்தினரால் டிஜிற்றல் கடிகாரம் பொருத்தப்பட்டு தைப்பொங்கல் தினத்தன்று மாலை 6.30மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் கு.பிரணவராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட லயன்ஸ் கழக ஆளுநர் பீற்றர்தேவ் தம்பதியினரும்,சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரச்சபைத் தவிசாளர் இ.சிவமங்கை, நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன்,சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். டிஜிற்றல் கடிகாரத்தை லயன் மாவட்ட ஆளுநர் மற்றும் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் ஆகியோர் இணைந்து மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தனர். (படங்கள்:-சுபேசன்)

# போதைவஸ்து ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் குறிப்பாக வட மாகாணத்தில் போதைவ ஸ்து பாவனை அதிகரித்து வருவதால் இதனை ஒழிக்கு ம் முகமாக விழிப்புணர்வுப் பேரணி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை சந்தியிலிருந்து பிரதேச செயலர் காரியாலயம் வரை நடைபெறும் என தெல்லிப்பழ பிரதேச மட்டத்திலான முதியோர் சங்கம் அறிவித்துள்ளது. (இ



குருநகர் யாகப்பர் ஆலயம், காணிக்கை மாதா ஆலயம், மரியாள் பேராலயம் என்பவற்றில் பொங்கல் விழா சிறப்பாக இடம் பெற்றது. (படம்:-குருநகர் செய்தியாளர்)





யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பொங்கல் விழா நேற்று முன்தினம் இடம் பெற்றது. (படங்கள்:- கொழும்புத்துறை செய்தியாளர்)

# கொலை அச்சுறுத்தல் விடுத்த இலங்.இராணுவ அதிகாரியை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(லண்டன)

லண்டன் வாழ் தமிழ் மக்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இலங்கை இராணுவ அதிகாரி பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ICPPG அமைப்பால் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றவியல் வழக்கின் இறுதிக்கட்ட விசாரணை எதிர்வரும் 21 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ளது. குறித்த இராணுவ அதிகாரியை 21 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான கீத் குலசேகரத்தால் வழிநடத்தப்பட்டுவரும் இந்த' வழக்கின் இரண்டாம் அமர்வின் போது வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்று (westminster magistrates court) மூலமாக கடந்த நவம்பர் 9 ஆம் திகதி குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக அழைப்பாணை விடுத்திருந்தது.

அதன்படி ஜனவரி 21 ஆம் திகதி அவர் நீதிமன்றில் ஆஜராகவேண்டுமென நீதிமன்றால் உத்தரவு விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி இதன் இறுதிக்கட்ட வழக்கு பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தின் போது (2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி) லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னால் பிரித்தானியா வாழ் தமிழர்களால் பாரிய எதிர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதன் போது தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு அதிகாரியான பிரியங்க பெர்னாண்டோ தூதரகத்திற்கு வெளியே வந்து ஆர்ப்பாட்டக்காரர்களை தனது தொலைபேசியில் படம் பிடித்ததுடன் அவர்களைப்பார்த்து கழுத்தை வெட்டுவேன் என்ற சமிக்ஞையுடனான கொலை அச்சுறுத்தலும் விடுத்திருந்தார்.

குறித்த காணொலி ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவியதையடுத்து உலகத்தமிழரிடையேயும் சர்வதேச அரங்கிலும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்த. இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு குறித்த அதிகாரியை பணிநிறுத்தம் செய்தது. எனினும் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய அவரது பணிநீக்கம் இரத்து செய்யப்பட்டு தொடர்ந்தும் பணியில் அமர்த்தப்பட்டார்.

இதனையடுத்து கொலை மிரட்டல் விடுத்த இராணுவ அதிகாரியை பிரித்தானிய பொலிஸார் கைது செய்ய வேண்டுமெனக்கோரி லண்டனில் உள்ள பொதுநலவாய அலுவலகத்திற்கு முன்னால் ஒட்டுமொத்த லண்டன் வாழ் தமிழர்களும் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர். அதேவேளை, குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. இதனையடுத்து பிரியங்க பெர்னாண்டோ இலங்கைக்கு திருப்பி அழைக்கப்பட்டார்.

எனினும் கொலைமிரட்டல் விடுத்த இராணுவ அதிகாரி லண்டனுக்கு



வரவழைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட வேண்டு மென பிரித்தானிய அரசுக்கு அழுத்தங்கள் தெரிவிக் கப்பட்டதுடன் அவருக்கு எதிராக நீதவான் நீதிமன்று நீதிமன்றில் வழக்கும் தொடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களான மயூரன் சதானந்தன் தலைமையில் கோகுலகிருஷ்ணன் நாராயணசாமி, வினோத்பிரியந்த ஆகியோர் சார்பில் ICPPG அமைப்பு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதி அமைச்சரான சொக்கலிங்கம் யோகலிங்கம் மற்றும் இந்தச் சம்பவ த்தை வீடியோ பதிவு செய்த சபேஸ்ராஜ் ஆகியோர் முக்கிய சாட்சிகளாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)


## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ.து)

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 23 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவு 19.01.2019 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெறவுள்ளது. இதற்கமைய கிளைப்பொதுச்சபை கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் கிளைக்குரிய தவிசாளர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் காரணங்களினால் அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் இவ் அறிவித்தலினை ஏற்று தமக்குரிய கிளையின் கிளைப்பொதுச்சபை கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுத் தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்களின் விபரம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | கிளை நிலையம், சாவகச்சேரி நகர் | திரு.சந்திரலிங்கம் சுவர்ணன் |
| 02 | சாவகச்சேரி தெற்கு | J/306 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் கல்லடி மூட்டு வீதி, நுணாவில் கிழக்கு | திரு.கந்தசாமி பிரதீபன் |
| 03 | நுணாவில் கிழக்கு | J/307 பொதுநோக்கு மண்டபம் வீரபத்திரர் வீதி, நுணாவில் மத்தி | திரு.சபாரத்தினம் அருள்நாதன் |
| 04 | நுணாவில் ஜோதி | பொதுநோக்கு மண்டபத்தில் உள்ள J/308 கிராமசேவையாளர் அலுவலகம், நுணாவில் மேற்கு | திரு.கந்தசாமி சசிகரன் |
| 05 | கைதடி நுணாவில் | கிளை நிலையம், கைதடி நுணாவில் | திரு.இரத்தினசிங்கம் கஜேந்திரன் |
| 06 | மீசாலை கிழக்கு | கிராம அபிவிருத்தி சங்க மண்டபம், மீசாலை கிழக்கு | திரு.யோசேப் ஜெகதாஸ் |
| 07 | வேரக்கேணி | கலைவாணி சனசமூக நிலையம், இலுப்பையடி வீதி, மட்டுவில்தெற்கு | திரு.பாக்கியராசா குருபரன் |
| 08 | மலர்மகள் | கலைமகள் சனசமூகநிலையம், மட்டுவில் தெற்கு | திரு.இராஜசிவம் தனுசன் |
| 09 | சோமஸ்கந்தா | கிளை நிலையம் சோமஸ்கந்தா மட்டுவில் தெற்கு | திரு.இராசையா உதயகுமார் |
| 10 | மட்டுவில் வடக்கு | கண்ணகை சனசமூகநிலையம், மட்டுவில் வடக்கு | திரு.நாகமுத்து ஜெயவதனன் |
| 11 | சரசாலை மட்டுவில் | கிளை நிலையம், சரசாலை மட்டுவில் | திரு.சோமசுந்தரம் தங்கேஸ்வரன் |
| 12 | சரசாலை தெற்கு | கிளைக் கட்டடம், சரசாலை தெற்கு | திரு.தாமோதரம்பிள்ளை தவமன்னன் |
| 13 | சரசாலை வடக்கு | கிளை நிலையம், சரசாலை வடக்கு | திரு.கணபதிப்பிள்ளை செந்தூரன் |
| 14 | மோகனதாஸ் | கிளை நிலையம், மட்டுவில் கிழக்கு | திரு.பாலச்சந்திரன் பாலரவி |
| 15 | கல்வயல் | கிளை நிலையம், கல்வயல் | திரு.கணேஸ் சுரேஸ்பாபா |
| 16 | சாவகச்சேரி வடக்கு | செல்வ விநாயகர் கலை இலக்கிய மண்டபம், மருதடி வீதி சாவகச்சேரி வடக்கு | திரு.பாலசுப்பிரமணியம் பாலவரதன் |
| 17 | வேம்பிராய் | சுடரொளி சனசமூக நிலையம், மீசாலை வடக்கு | திரு.கணேசராசா பரநிருபன் |
| 18 | மீசாலை வடக்கு | கிளை நிலையம், மீசாலை வடக்கு | திரு.பாலரட்ணம் சிவபாலன் |
| 19 | மீசாலை மேற்கு | கிளை நிலையம், மீசாலை மேற்கு | திரு.செகராசா பகீரதன் |
| 20 | சாவகச்சேரி வடகிழக்கு | சித்திர வேலாயுதர் சனசமூகநிலையம், மீசாலை கிழக்கு | திரு.ஐயாத்துரை மயூரன் |
| 21 | சங்கத்தானை | கிளை நிலையம், சங்கத்தானை | திரு.சிங்கராசா சியாந்தன் |
| 22 | சப்பச்சிமாவடி | கிளை நிலையம், சப்பச்சிமாவடி | திரு.நாகலிங்கம் குமணதாசன் |
| 23 | கோயில் குடியிருப்பு | கிளை நிலையம், கோயில் குடியிருப்பு | திரு.விநாசித்தம்பி சிவபாலன் |

செயலாளர்,
சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ.து)
17.01.2019 (C-5168)

கண்டி வீதி,
சாவகச்சேரி


## மாசேரி இந்து மயானத்திற்கு எரி கொட்டகை அமைப்பு



(வரணி)

சாவகச்சேரி பிரதேசசபையின்ஆளுகைக்குட்பட்ட மாசேரி கப்பத்தை இந்து மயானத்திற்கு எரிகொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எரிகொட்டகை அமைக்கப்படாமை தொடர்பாக மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தனின்கவனத்திற்குக் கொண்டு சென்றனர்.

அவர் இவ்விடயம் தொடர்பாக கிராமத்திற்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு மக்களின் குறைகளை கேட்டதுடன் மாசேரி கப்பத்தை இந்து மயானத்திற்கும் சென்று அங்குள்ள குறைபாடுகள் தொடர்பாக மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தினருடன் கலந்துரையாடினார்.

இதேவேளைஉடனடியாக தனது மாகாண சபை நிதியொதுக்கீட்டின் கீழ் எரிகொட்டகைஅமைப்பதற்குநடவடிக்கை மேற்கொள்வதாகஉறுதியளித்தார். இதன்படி 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் தற்போது எரிகொட்கை அமைக்கப்பட்டுள்ளது. (இ-103)


## மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வரைவுள்ளது)

### கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுச்சபை கூட்டம்

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் (20.01.2019) முற்பகல் 10.00 மணி.

| தொ இல | தவிசாளர் பெயர் | கிளை பெயர் | கிளை இல | காலம் | நேரம் காலை | கிளை பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | நாகமுத்து ஜெயவதனன் | கூழாவடி | 3 | 20.01.2019 | 10.00மணி | கிளை 03 இன் கிளைக்கட்டடம் |
| 02 | கணேசராசா பரநிரூபன் | கூழாவடி | 4 | 20.01.2019 | 10.00மணி | கிளை 03 இன் கிளைக்கட்டடம் (அருகில்) |
| 03 | பாக்கியராசா குருபரன் | ஆனைக்கோட்டை | 5 | 20.01.2019 | 10.00மணி | கிளை 05 இன் கிளைக்கட்டடம் |
| 04 | வடிவேல் கிருஷாந் | நவாலி கிழக்கு | 6 | 20.01.2019 | 10.00மணி | முருகானந்தா சனசமூக நிலையம் |
| 05 | செகராசா பகீரதன் | மணிமண்டபம் | 7 | 20.01.2019 | 10.00மணி | கிளை 07 இன் கிளைக்கட்டடம் |
| 06 | பாலச்சந்திரன் பாலரவி | நவாலி தெற்கு | 8 | 20.01.2019 | 10.00மணி | கிளை 08 இன் கிளைக்கட்டடம் |
| 07 | இராஜசிவம் தனுசன் | நவாலி வடக்கு | 9 | 20.01.2019 | 10.00மணி | கிளை 09 இன் கிளைக்கட்டடம் |
| 08 | சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | மானிப்பாய் தெற்கு | 10 | 20.01.2019 | 10.00மணி | மானிப்பாய் இந்து சமய சங்கம் |
| 09 | பரமசிவம் தவப்பிரியன் | மானிப்பாய் வடக்கு | 11 | 20.01.2019 | 10.00மணி | தலைமைக்காரியாலயம் மானிப்பாய் கோவில் ப.ப.நோ.கூட்டுறவுச் சங்கம் |
| 10 | கணபதிப்பிள்ளை செந்தூரன் | கட்டுடை | 12 | 20.01.2019 | 10.00மணி | ஞானரைவரவர் சனசமூக நிலையம் |
| 11 | சிங்கராசா சியாந்தன் | சண்டிலிப்பாய் மத்தி | 13 | 20.01.2019 | 10.00மணி | கிளை 13 இன் கிளைக்கட்டடம் |
| 12 | யோசெப் ஜெகதாஸ் | சண்டிலிப்பாய் வடக்கு | 14 | 20.01.2019 | 10.00மணி | கலைவாணி முன்பள்ளி சண்டிலிப்பாய் (ஆலங்குழாய்) |
| 13 | இராசையா உதயகுமார் | ஆலங்குழாய் | 15 | 20.01.2019 | 10.00மணி | ஆலங்குழாய் (சண்டிலிப்பாய்) சனசமூக நிலையம் |
| 14 | நாகலிங்கம் குமணதாசன் | சுதுமலை வடக்கு | 16 | 20.01.2019 | 10.00மணி | நாமகள் சனசமூக நிலையம், சுதுமலை |
| 15 | தாமோதரம்பிள்ளை தவமன்னன் | சுதுமலை தெற்கு | 17 | 20.01.2019 | 10.00மணி | சுதுமலை மத்தி சனசமூக நிலையம் |
| 16 | கணேஸ் சுரேஸ் பாபா | சாவற்கட்டு | 19 | 20.01.2019 | 10.00மணி | மகாத்மா சனசமூக நிலையம், சாவற்கட்டு |
| 17 | ஜெயபாலன் சதீஸ் | உயரப்புலம் | 20 | 20.01.2019 | 10.00மணி | பாரதி சனசமூக நிலையம், உயரப்புலம் |
| 18 | வல்லிபுரம் நிதர்சன் | கெல்லாவில் | 23 | 20.01.2019 | 10.00மணி | யுவசக்தி சனசமூக நிலையம், கெல்லாவில் |
| 19 | பாலசுப்பிரமணியம் பாலவரதன் | மாகியம்பதி | 24 | 20.01.2019 | 10.00மணி | கிளை 24 இன் கிளைக்கட்டடம் |
| 20 | சற்குணசிங்கம் பிறேமிலன் | மானிப்பாய் வட கிழக்கு | 25 | 20.01.2019 | 10.00மணி | பாரதி சனசமூக நிலையம், மானிப்பாய் |
| 21 | குணரத்தினம் நிசாந்தன் | கொத்துக்கட்டி | 32 | 20.01.2019 | 10.00மணி | கிளை 32 இன் கிளைக்கட்டடம் |

சகல கிளை பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் கூட்ட அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடையவர்கள் அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவிடத்து இந்த அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C-5166)

ஒப்பம்: செல்வி பரீன் ஹஸ்ஸான அப்துல் சமீயூ
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம். 14.01.2019

# வழக்கத்திலிருந்த நில உரிமை முறைமைகளும் மண்ணின் மகிமை (பிம்சவிய) நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காணி உரித்துப் பதிவும்

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



6. முத்திரைக் கட்டளைச் சட்டம் (stamp duty ordinance)

காணியின் கைமாற்றம் தொடர்பில் ஆவணங்கள் தயாரிக்கும் போது கொடுக்கப்பட வேண்டிய முத்திரை வரி சம்பந்தமாக இச் சட்டத்தின் ஒரு பிரிவில் கூறப்பட்டுள்ளது.

7. நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (Notaries Ordinance - Date of Commencement: 27th March, 1907)

நொத்தாரிசு ஒருவரின் தகுதி, நியமனம், கடமை, தொழில் சம்பந்தமாக கூறப்பட்டுள்ளது.

8. நிதிச் சட்டம் (Finance Act) - இச் சட்டத்தின் கீழ் மதிப்பீட்டு திணைக்களம் வருவதோடு காணியின் பெறுமதி இத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்படும்.

**குறிப்பு:** கூட்டு குடியிருப்புக்கள் (Condominium Property) என்றால் தனித்தனியாக சொந்தமான அடுக்கு மாடிக் குடியிருப்புகளையோ அல்லது வீடுகளையோ கொண்டிருக்கும் கட்டடங்கள் என்றுபொருள்படும்.

### காணி உறுதியை பதிவு செய்யும் படிமுறைகள்

காணிப்பதிவு அலுவலகத்தில் (Land Registry) ஒரு ஆவணம் (Deed) பதிவு செய் யும் படிநிலைகள் பின்வருவனவாகும்.

1. சம்பந்தப்பட்ட காணி பதிவகத்தில் (Land Registry) நொத்தாரிசு ஒருவர் ஒரு தலைப்புதேடலை (title search) செய்து கொண்ட பின்னர் தலைப்புப் பத்திரம் (title report) பெறுதல்.

2. காணி உறுதிப் பத்திரத்தில் காணி விற்பவர், வாங்குபவர், இரண்டு சாட்சிகள் ஆகியோரின் கையெழுத்தைப் பெற்ற கையோடு நொத்தாரிசு சான்றுபடுத்துதல்.


3. முத்திரை வரியாகச் செலுத்தப்படவேண்டிய பணத்தை சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் செலுத்துதல்.

4. நொத்தாரிசு / சட்டத்தரணி அல்லது காணி வாங்குபவரால் எழுதப்பட்ட உறுதியை பதிவு செய்வதற்கு காணி பதிவகத்தில் கையளித்தல்.

5. காணி உறுதிப்பத்திரத்திரம் காணி பதிவகத்தில் பதிவு செய்தல்.

6. பதிவு செய்யப்பட்ட காணி உறுதிப்பத்திரத்திரத்தை பெற்றுக் கொள்ளல்.


கூட்டு குடியிருப்புக்கள் (Condominium Property)
தனித்தனி கூட்டு குடியிருப்புக்கள் தொடர்மாடி கூட்டு குடியிருப்புக்கள்




### மண்ணின் மகிமை/ நிலசக்தி (பிம்சவிய) நிகழ்ச்சித் திட்டம்

உறுதிப் பதிவு முறை பற்றி பொதுவாகக் கூறின் இந்த முறையில் காணிக்கு முழு உரிமைத்துவம் அளிப்பதில்லை. பதிவு மட்டும் உறுதி செய்யப்படுகின்றது.

இவ்வுறுதிப்பதிவு முறை யில் உள்ள குறைபாடுகளை நீக்கும் பொருட்டே 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித் துப் பதிவுச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

காணி உரித்துப் பதிவு: காணி உரித்துப் பதிவு முறையை நடைமுறைப்படுத்துவதினால் உறுதிப் பதிவு முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கிக் கொள்ள முடியும். காணி உரித்துப் பதிவு முறையின் கீழ் பதிவு செய்யப்ப டும் அடிப்படைக்கூறு காணித்துண்டு ஆகும். உறுதியல்ல.

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் காணி உரித் து பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2002 மார்ச் மாதம் தொடக்கம் இந் நிகழ்ச்சித் திட்டமானது வெளிநாட்டு உதவியின் கீழ், பரீட்சார்த்தக் கருத்திட்டமாக காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள்ஒன்றிணைந்து 2006 டிசெம்பர் வரை வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டது.

இந் நிகழ்ச்சித் திட்டம் வெற்றியளித்தமை யைத் தொடர்ந்து உள்ளூர் நிதியை ஈடுபடுத்தி 'பிம்சவிய' எனும் பெயரில் இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் அமுல் செய்யப்படுகின்றது.

பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் 03 ஆகும்.

- இலங்கையில் காணிப் பதிவு முறையை, மிகவும் நம்பகத் தன்மையுடனும், வினைத்திறன் மிக்கதும், இலகுவானதுமான முறையொன்றாக மாற்றியமைத்தல்
- காணிப் பிரச்சினைகளையும், காணிப் பிணக்குகளையும் தீர்த்து வைப்பதனூடாக காணிகளின் உரித்தை வலுப்படுத்தல்.
- சிறந்த காணி முகாமைத்துவத்திற்காக கணனி மயப்படுத்தப்பட்ட காணித்தகவல் முறைமையொன்றைத் தோற்றுவித்தல்.

இங்கு காணி உறுதி, அரசினால் நபர்களுக்கு விநியோகிக்கப்பட்ட கொடைப் பத்திரங்கள், நியாதன (குறை வருமானமுடையவர்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிப்பு) சாதனப் பத்திரங்கள் முதலான உரித்தைப் பிரகடனப்படுத்துகின்ற நானாவித ஆவணங்களுக்குப் பதிலாக, அரசாங்கம் பொறுப்புக் கூறுகின்ற உரித்துச் சான்றிதழை இலவசமாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகத்தின் தகவலின் படி 2012-2017 வரையில் பதியப்பட்ட காணி உறுதிகளின் எண்ணிக்கை

| காணிப் பதிவு அலுவலகம் | பதிவுசெய்யப்பட்ட காணி உறுதிகளின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டுகள் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| அம்பாறை | 5,092 | 2,547 | 5,103 | 5,136 | 5,435 | 5,758 |
| யாழ்ப்பாணம் | 31,100 | 25,154 | 23,796 | 25,430 | 31,338 | 30,658 |
| கல்முனை | 18,964 | 16,367 | 15,839 | 16,717 | 21,020 | 20,193 |
| மட்டக்களப்பு | 22,019 | 18,725 | 19,929 | 21,131 | 28,894 | 30,779 |
| கிளிநொச்சி | 2,531 | 1,780 | 2,916 | 2,241 | 2,522 | 2,800 |
| மன்னார் | 4,685 | 4,712 | 4,855 | 3,754 | 4,781 | 4,252 |
| முல்லைத்தீவு | 1,174 | 1,353 | 1,635 | 1,415 | 2,311 | 2,634 |
| பருத்தித்துறை | 5,511 | 4,732 | 4,472 | 4,530 | 5,915 | 4,974 |
| திருமலை | 5,997 | 6,393 | 7,541 | 7,320 | 9,027 | 8,421 |
| வவுனியா | 2,082 | 2,315 | 2,900 | 1,892 | 3.073 | 3,588 |
| இலங்கை (நாடு முழுவதும்) | 1,081,096 | 951,746 | 1,042,233 | 1,100,458 | 1,163,532 | 1,152,056 |

காணியின் சிக்கலற்ற உரித்துத் தொடர்பில் அரசு நேரடியாகப் பொறுப்புக் கூறும் இவ் உரித்துச் சான்றிதழ் முறையின் கீழ் ஒவ்வொரு காணித் துண்டிற்காகவும் பரிபூரணமான நில அளவை வரைபடமொன்று விநியோகிக்கப்படுவதானது. மிகப் பயனுள்ள காரியமாகும். உரித்துப் பதிவுக்காக ஒவ்வொரு காணித் துண்டையும் அளந்து கடத்திரள் வரைபடமொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

இதன் அடிப்படையில் கிராமமொன்றை ஆரம்ப அலகொன்றாகக் கருதி, முழு இலங்கையும் உட்படுமாறு அனைத்துக் கிராமங்களையும் அளக்கும் நடவடிக்கைகளும், இவற்றுக்கான கடத்திரள் வரைபடங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளும் இதனூடாக மேற்கொள்ளப்படும்.

கிராமத்துடன் தொடர்புடைய ஒவ்வொரு காணித் துண்டையும் உள்ளடக்கி எல்லைகளைக் குறிக்கும் வகையில் எல்லைக் கற்களை இட்டு வரைபடம் தயாரிக்கப்படுவதுடன், ஒவ்வொரு காணித் துண்டிற்குமான எல்லைகளைத் தீர்மானிக்கும் நடவடிக்கைகள், உரிய காணி உரிமையாளருடன்கலந்துரையாடிபொது இணக்கப்பாட்டொன்றிற்கு வந்ததன் பின்பு மேற் கொள்ளப்படும்.

(தொடரும்...)

# விஞ்ஞான ஆய்வுகூட பாதுகாப்பு முறைகள்

ஆய்வுகூடத்தில் ஏற்படும் ஆபத்துக்களை பின்வருமாறு 3 பிரிவுகளாக நோக்கலாம்.

1. உயிரியல் ஆபத்துக்கள்.
2. உடலியல் ஆபத்துக்கள்.
3. இரசாயனவியல் ஆபத்துக்கள்.

விஞ்ஞான ஆய்வுகூடப் பாதுகாப்பு முறைகளை ஆறு பெரும் பிரிவுகளாக பிரித்து நோக்க முடியும்.

I. நெருப்பிலிருந்து பாதுகாப்பு.
II. கண்களைப் பாதுகாத்தல்.
III. இரசாயனத்திலிருந்து பாதுகாத்தல்.
IV. தனியாள் முற்பாதுகாப்பு.
V. ஆய்வுகூட நுட்பங்கள்.
VI. ஆய்வுகூட சூழல்.

இவற்றை தனித்தனியாக நோக்குவோம்.

### நெருப்பிலிருந்து பாதுகாப்பு

1. நெருப்பைக் கண்டவுடன் ஆசிரியருக்கு உடன் தெரியப்படுத்தல்.
2. சுவாலைக்கு அண்மையில் எரியக்கூடிய பதார்த்தங்களை பயன்படுத்தவும் மற்றும் கையாளவும் கூடாது.
3. தீயணைக்கும் கருவி, நெருப்பிலிருந்து பாதுகாப்பு பெறும் மேலங்கி, தீ விபத்தின் போது ஆபத்தினைத் தடுப்பதற்காக உடன் வெளியேறும் பாதை மற்றும் தீ விபத்தினை அறிவிக்கும் முன் எச்சரிக்கை மணியின் இருப்பிடத்தை மாணவர்கள் முன்கூட்டியே தெரிந்திருத்தல் வேண்டும்.

### கண்களைப் பாதுகாத்தல்

1. கண்களைப் பாதுகாக்கும் கண்ணாடிகளை அணிந்து கொள்ள வேண்டும்.
2. ஆய்வுகூடத்தில் கண் கழுவும் இடம் மற்றும் அதனைப் பயன்படுத்தும் முறை என்பவற்றைத் தெரிந்திருத்தல் வேண்டும்.
3. கண்ணுக்கு பயன்படுத்தும் தொடர் வில்லைகளை **(Contact lenses)** எவ்வாறு பயன்படுத்துவது பற்றிய ஆசிரியரின் ஆலோசனையைப் பெறுதல்.
4. **Wear your goggle.**

### இரசாயனத்திலிருந்து பாதுகாத்தல்

1. இரசாயனப் பதார்த்தங்களின் கசிவு மற்றும் அவை சிந்தியமை தொடர்பாக ஆசிரியருக்கு உடன் அறியத்தருதல் வேண்டும்.
2. சிந்திய இரசாயனங்களை சரியான முறையில் அகற்றுதல் வேண்டும்.
3. ஆடையில் மற்றும் உடலில் சிந்திய இரசாயனங்களை பொருத்தமான முறையில் உடனடியாக சுத்தப்படுத்தல் வேண்டும்.
4. அமிலப் பதார்த்தங்கள் உடலில் படுமெனில் அவற்றை நடுநிலைப்படுத்த சோடியம் இரு காபனேற்றை பயன்படுத்த வேண்டும்.
5. காரப் பதார்த்தங்கள் உடலில் படுமெனில் அவற்றை நடுநிலைப்படுத்த அசிற்றிக்கமிலத்தை பயன்படுத்த வேண்டும்.
6. இரசாயனப் பதார்த்தங்களை மாணவர்கள் ஒருபோதும் வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிக்கக்கூடாது.

### தனியாள் முற்பாதுகாப்பு

1. ஆய்வுகூடத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் காயங்களை ஏற்பட்டது என்பதை விடுத்து உடனடியாக ஆசிரியருக்கு தெரியப்படுத்த வேண்டும்.
2. நீண்ட கூந்தல் மற்றும் தளர்ந்த ஆடைகள் என்பவற்றுடன் ஆய்வுகூடத்தில் ஈடுபடுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. ஆய்வுகூடத்தில் கால்களைப் பாதுகாக்கும் சப்பாத்துக்களை அணிதல் வேண்டும்.
4. ஆய்வுகூட உபகரணங்களை ஒருபோதும் கூடத்துக்கு வெளியே எடுத்துச் செல்லுதல் கூடாது.
5. ஆய்வுகூட கருமங்கள் முடிவுற்ற பின்னர் கைகளை சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவுதல் வேண்டும்.
6. முரட்டுத்தனமான அல்லது பகிடியான விளையாட்டுக்களில் ஆய்வுடத்தில் ஒருபோதும் ஈடுபடல் கூடாது.
7. உணவுகள், குடிபானங்கள் என்பனவற்றை ஆய்வுகூடத்திற்குள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.
8. ஆசிரியரின் அனுமதியின்றி ஆய்வு பதார்த்தங்களை ருசித்துப் பார்த்தல் கூடாது.
9. தலையிடியோ அல்லது ஏதேனும் உடல் உபாதைகளையோ உடன் ஆசிரியருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.
10. முதலுதவிப் பெட்டியின் அமைவிடத்தைத் தெரிந்திருத்தல் வேண்டும்.

### ஆய்வுகூட நுட்பங்கள்

1. சூடாக்கப்படும் பரிசோதனைக் குழாயின் திறந்த முனையை ஒருபோதும் கைகளால் தொடுதல் கூடாது.
2. சூடான முகவைகள் குளிராகும் வரை காத்திருத்தல் வேண்டும்.
3. வழிகாட்டல்களை எப்பொழுதும் வாசித்துப்பின்பற்றல் வேண்டும்.
4. இரசாயனப் பதார்த்தங்களில் இருந்து புகை அல்லது ஆவி என்பவற்றை சுவாசித்தல் கூடாது.
5. அளவி குழாயிகளை வாயினால் நிரப்புவது தவிர்க்கப்படல் வேண்டும்.
6. எல்லா இரசாயன ஆபத்துக்கள் பற்றி தெரிந்திருத்தல் வேண்டும்.
7. அங்கீகாரம் அளிக்கப்படாத பரிசோதனைகள் எல்லாம் தடை செய்யப்பட வேண்டும்.
8. தீக்குச்சிகள், வடிதாள்கள், கரைய முடியாத பதார்த்தங்களை சாதாரண நீர்த்தொட்டிகளுக்குள் இடாது அதற்கென ஒதுக்கப்பட்ட முகவைகளில் இடுதல் வேண்டும்.



ம.ரவீஸ்வரன்,
பாட இணைப்பாளர்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

9. குறிப்பாகச் சொன்னால். அன்றி பயன்படுத்த எடுத்த இரசாயனங்களின் மீதியை அவற்றிற்குரிய கொள்கலன்களில் மீள இடுதல் கூடாது.
10. அமிலப் பதார்த்தங்களை ஐதாக்கும் போது நீருக்குள் அமிலத்தைச் சேர்த்தல் வேண்டும். அமிலத்திற்கு நீரைச்சேர்த்தல் கூடாது.
11. மின் வெளியேறும் பகுதிகள், மின் செருகிகள், மின் ஆளிகள் என்பவற்றை தொட முன் கைகள் உலர்ந்த நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
12. ஆய்வுகூட உபகரணம் ஒன்று சரியாகத் தொழிற்படவில்லையெனில் பரிசோதனையை நிறுத்தி, ஆசிரியருக்கு உடன் தெரியப்படுத்தல் வேண்டும்.

### ஆய்வுகூட சூழல்

1. ஆய்வுகூட தரைகள் நடைபாதைகளில் ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பதார்த்தங்கள், பாடப்புத்தகங்கள் இன்றி துப்புரவாக இருத்தல் வேண்டும்.
2. ஆய்வுகூடத்தை துப்புரவு செய்வது எல்லா மாணவர்களது கடமையாகும்.
3. ஆய்வுகூடங்களில் பரிசோதனை தொடர்பான விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆய்வுகூடங்களில் பின்பற்றப்படும் ஒழுங்கு முறைகள் மற்றும் பாதுகாப்பு முறைகள் பற்றி காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

### ஆய்வுகூடத்தில் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் தனியாள் உபகரணங்கள்

1. காலணிகள்.
2. ஆய்வுகூட மேலங்கி.
3. கையுறைகள்.
4. கண் பாதுகாப்புக் கண்ணாடிகள்.
5. முக அங்கிகள்.
6. தலைக்கவசங்கள்.
7. சுவாசப் பாதுகாப்பு அங்கிகள்.
8. ஆவி,புகை என்பவற்றை மறைக்கும் கவசம்.

## பட்டம் விட்டவர்களால்

# நெல்லியடியில் நெல் வயல்கள் நாசம்

பட்டம் விட்டவர்களால் நெல் வயல் நாசமாகியுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம் முறைப்பாட்டை கரவெட்டி பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் மேற்கொண்டுள்ளார்.

தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பட்டம் விட்ட ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் விளைந்த நிலையில் காணப்பட்ட வயலுக்குள் ஓடித் திரிந்ததால் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயியே முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். (இ-60)

## குறை'களை' பதிகம் 08

### இது சரியோ இது முறையோ



அராலி வீதி காக்கைதீவு
வயிரவர் கோவிலடியில்
நூற்றுக்கணக்காய்
கொட்டிக் கிடக்கும்
சைவப்படங்கள் பேசுகின்றன....,

அன்புசால் சைவ பெருமக்காள்
காலையில் சந்தியா வந்தனம் முடித்து
ஈசானத்தில் சலம் பூவோடு தூபமேற்றி
பஞ்சபுராணம் பாடி கடமை செய்விர்
உங்கள் சரியை வழிபாட்டை மெச்சி
நாமும் அருள்புரிவோம்.

எம்மில் சிறு காயம் ஏற்பட்டபோது
அப்படியே தூக்கிச் சென்று
வீதியோரம் மரத்தின் கீழ் வைத்தேகிடுவிர்

மழை வெய்யில் பறவை எச்சம் எமக்கு அபிஷேகம்
மாற்று சமயத்தவர் கண்டு மனம் வெதும்பி
இதுதான் இவர்கள் தெய்வங்களோ என இகழ்வர்
இது சரியோ முறையோ கண்ணாடி வேறாக்கி
எம்மை நீரில் கரைத்தால் வெதும்பி நிற்கோம்

-சிவனடியான்-

# கால்கோள்விழா இன்று

யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் கால்கோள் விழா இன்று காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சாந்தனி வாகீசன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விர்ந்தினராக யாழ். வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி.ஞானசுந்தரம், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் செ.சிவஞானசுந்தரம், கௌரவ விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சிவகுமாரி தயாபரன் (பழைய மாணவி) ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

---

வட இந்து ஆரம்பப் பாடசாலையில் கால்கோள் இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்து கொள்வார். (இ-60)

---

யாழ்.அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய கால்கோள் விழா இன்று காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.மகேஸ், சிறப்பு விருந்தினராக த.கேதீஸ்வரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

---

யாழ்.இடைக்காடு மகாவித்தியாலயத்தின் கால்கோள்விழா இன்று 17 ஆம் திகதி காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் கு.வாகீசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினராக பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் நா.கந்தசாமி கலந்து கொள்வார். (இ-7)

---

யாழ்.கெற்பேலி அ.த.க.பாடசாலையின் கால்கோள் விழா இன்று முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.ஞானராசா தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்து கொள்வார். (இ-5)

---

யாழ்.வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் கால்கோள் விழா அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் சி.நாகராசா, சிறப்பு விருந்தினராக வரணி வடக்கு கிராம உத்தியோகத்தர் த.அருந்தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)


# மன்னார் மனிதப்புதைகுழி அகழ்வு

# 300 மனித எச்சங்கள் அடையாளம்

## சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் சதொச மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளின் போது இதுவரை சுமார் 300 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அகழ்வுக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.



மன்னார் நகர் நுழைவு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் அகழ்வுப் பணிகள் நேற்றுடன் 130 ஆவது நாட்களைக் கடந்து இடம் பெற்று வருகின்றது.



அந்த வகையில் நேற்றைய தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ,

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பனியானது இன்றுடன் 130 ஆவது தடவையாக இடம் பெற்று வருகின்றது. இதுவரை 300 மனித எச்சங்கள் குறித்த வளாகத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 294 மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக இவ் 294 மனித எச்சங்களும் புளோரிடாவிற்கு காபன் பரிசோதனைக்கு அனுப்ப தெரிவு செய்யப்பட்ட எச்சங்களும் மன்னார் நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் 23 ஆம் திகதி மனித எச்சங்கள் ஆய்வுக்காகப் புளோரிடா கொண்டு செல்லப்பட இருப்பதாகவும் குறித்த ஆய்வின் முடிவுகள் ஒப்படைக்கப்பட்டு இரு வாரங்களில் அறிவிக்கப்படும். அதுவரை மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார். (2-285)

### உருத்திரபுரீஸ்வரம் மக்களுக்கு உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உருத்திரபுரீஸ்வரம் மக்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஒழுங்மைப்பில் லண்டனைச் சேர்ந்த சிறீஸ கந்தராஜா காந்தா குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பின் மூலம் கிளிநொச்சியில் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உருத்திரபுரீஸ்வரம் மக்களுக்கான உலருணவுப் பொருட்களடங்கிய பொதி, உணவல்லாத அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொதி என்பன வழங்கப்பட்டுள்ளன.

நிவாரணப் பணிக்குழுவினர் நேரடியாகச் சென்று மக்களிடம் வழங்கியிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஒழுங்கமைப்புக்கமைவாக புலம்பெயர் தேசத்துத் தாயக உறவுகளால், வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி நிவாரண உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

## ‘உறவுகளுடனான பாசம் பகிரும் பயணம்’

# 200 மாணவர்களுக்கு கற்றல் கருவிகள், 30 முதியோர்களுக்கு உதவித் தொகை





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மருதமடுக் கிராமத்தில் காந்தள் புலம்பெயர் அமைப்பின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் விழாவானது மிகச் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

இந் நிகழ்வில் மாணவர்களுக்குக் கற்றல் கருவிகளும், முதியோர்களுக்கான மாதாந்த உதவுத் தொகைகளும் காந்தள் புலம்பெயர் இளையோர் அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வானது காந்தள் புலம்பெயர் அமைப்பின் "உறவுகளுடனான பாசம்பகிரும் பயணம்" எனும் செயற்றிட்டத்தில், தைப்பொங்கல் நாளான நேற்று முன்தினம் மருதமடுப் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்றுள்ளது.

இந் நிகழ்வில், மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து, மரபு வழியில் தைப்பொங்கல் பொங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனையடுத்து மாணவர்களது கலை நிகழ்வுகள், விருந்தினர்களது உரைகள் என்பனவும் இடம் பெற்றன.

அத்தோடு இந் நிகழ்வில் 200 பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் கருவிகளும் 30 முதியோர்களுக்கான மாதாந்த உதவித் தொகைகளும் காந்தள் புலம்பெயர் இளையோர் அமைப்பினால் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உப தலைவர், கோம்பாவில் கிராம உத்தியோகத்தர் இ.தேவகி, மாணிக்கபுரம் கிராம அலுவலர் தி.உமாயிதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2)

## புன்னை நீராவி கிராம அபிவிருத்தி சங்கத்தில்

# செய்து முடிக்க வேண்டிய திட்டங்கள் குறித்து நடைமுறைப்படுத்துவதற்கான கலந்துரையாடல்

(கண்டாவளை)


கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் ஆளுகைக்குட்பட்ட கே.என் 57 கிராம சேவையாளர் பிரிவின் கீழ் இயங்கும் புன்னைநீராவி கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் இலாபத்தைப் பெற்று பல்வேறு வேலைகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மிக துரிதகதியில் செய்து முடிக்கப்பட வேண்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அவசிய கலந்துரையாடல் புன்னை நீராவி அ.த.க.பாடசாலையில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கோகிலன் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றது.

புன்னைநீராவி கிராம சேவையாளர் அஜித்குமார், கண்டாவளை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.பிரபா, புன்னைநீராவி வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மக்கள் கோரிக்கை விடுத்துள்ள அனைத்து விடயங்களுக்கும் மிக துரிதச் செயற்பாட்டு நடவடிக்கை ஓரிரு மாதங்களுக்குள் செயற்படுத்தப்படும் என அதிகாரிகளால் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# மோட்டார் சைக்கிள் விபத்து

## ஒருவர் படுகாயம்



(பனிக்கன்குளம்)

வவுனியா புகையிர நிலைய வீதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா சைவப்பிரகாச கல்லூரி வீதியூடாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் புகையிர நிலைய வீதிக்கு செல்ல முற்பட்ட சமயத்தில் புகையிரத நிலைய வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியாப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டனர். (2-281)

# மாற்று தேவை உடைய குழந்தைகளுடன் பொங்கல் விழா



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மாற்றுத் தேவைக்குட்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் (மாடப்) நிறுவனத்தில் மன்னார் தமிழமுது நண்பர் வட்டம் அமைப்பினர் ஏற்பாட்டில் தமிழர் நிகழ்வான பொங்கல் விழா நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாற்றுவலு உடைய சுமார் 20 இற்கு மேற்பட்ட குழந்தைகள், அக்குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், தமிழமுது நண்பர் வட்ட அமைப்பினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-285)

# புதிய உள்ளூர் அதிகாரசபைகளை ஸ்தாபித்தல், தரமுயர்த்தல் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம்

## முல்லை.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது





(பனிக்கன்குளம்)

புதிய உள்ளூர் அதிகார சபைகளை ஸ்தாபித்தல் மற்றும் தற்போது உள்ள உள்ளூர் அதிகார சபைகளை தரமுயர்த்தல் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கரைதுறைப்பற்று பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்துதல் மற்றும் ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பிரதேசங்களுக்கு தனித்தனியான பிரதேச சபைகளை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயும் முகமாக இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில்இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சின் செயலாளர்கள், முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளின் தவிசாளர்கள், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்துமாறும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையை ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பிரதேசங்களுக்கு தனித்தனியான பிரதேச சபைகளாக பிரிக்குமாறும் மக்கள் தொடர்ச்சியாக கோரிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (2-281)




# வேளாண் அபிவிருத்தி ஒன்றியம் வவுனியாவில் அங்குரார்ப்பணம்



(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வன்னி பிராந்திய வேளாண் அபிவிருத்தி ஒன்றியம் என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் அவர்களின் நலன்பேணும் அமைப்பாகவும் அவர்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் அமைப்பாகவும் இவ் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகில குமார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இதன்போது செயலாளராக கனகசபை அமிர்தலிங்கம், தலைவராக செல்லத்துரை ஸ்ரீதரன், பொருளாளராக நாகமுத்து நாகேந்திரன், உப தலைவராக ச. பூலோகசிங்கம், உப செயலாளராக கு.இராசேந்திரகுமார், போசகர்களாக வேலுப்பிள்ளை கேதீஸ்வரன், தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் 'திருமதி அஞ்சலா கோகிலகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (2-281)

# ஒளிரும் வாழ்வு அமைப்பினால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் தைப் பொங்கல் தினமான நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையின் நிதி உதவியுடன் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவினால் ஒளிரும் வாழ்வு அமைப் பினால் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் குறித்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் குறித்த நிகழ்வு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் அரசடி சித்தி விநாயகர் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பாடசாலையின் ஆலோசகர், ஆசிரியர்கள், ஆலய நிர்வாகத்தினர் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் பொங்கல் நிகழ்வு





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தின் பொங்கல் விழா ஒட்டுசுட்டான் தான் தோன்றிஸ்வரர் முன்றலில் நடைபெற்றுள்ளது

முல்லைத்தீவு இராணுவத்தளபதி மேஜர்ஜெனரல் துசியந்த ராஜகுருவின் ஏற்பாட்டில் பாரம்பரிய உணவுகள் சிறுவர்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்கிய தோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட நிலையில் முதலிடத்தைப்பெற்ற மாணவிக்கு 25 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் பாடசாலைக்குத் தேவையான பெறுமதியான கற்றல் உபகரணங்களும் இராணுவத்தினர் வழங்கி கௌரவித்தனர். (2)

# நல்ல மனிதர்களை உருவாக்குவதற்கு அறநெறி பாடசாலைகள் அடித்தளமாகின்றன

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு



(கண்டாவளை)

சமூகத்தில் நல்ல மனிதர்களை உருவாக்குவதற்கு அறநெறிப் பாடசாலைகள் அடித்தளமாக அமைகின்றன என்று பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை நேற்று முன்தினம் பாண்டியன்குளம் அறநெறிப்பாடசாலையில் வைத்து வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புலம்பெயர் உறவுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளைச் செய்து வருன்கிறார்கள். இந்த உறவுகள் பனியிலும் குளிரிலும் அவர்கள் சிந்துகின்ற உழைப்பும் வியர்வையும் எமது மக்களுக்கு பேருதவியாகவுள்ளது.

அந்த அடிப்படையில் சிவன் கோவில் அறக்கட்டளை உதவியுடன் இன்று செய்யப்படுகின்ற இந்த கற்றல் உபகரணங்கள் எமது மாணவர்களின் வாழ்வை மேலும் முன்னேற்றப் பேருதவியாக இருக்கும்.

அறநெறிப் பாடசாலைகள் என்பது எமது சமூகத்தில் நல்ல மனிதனை உருவாக்குகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# புன்னை நீராவி பால்சபை கட்டடத்தை நூலகமாக மாற்றுமாறு மக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கே.என் 57. கிராம சேவையாளர் பிரிவின் புன்னை நீராவி கிராமத்தில் கடந்த நான்கு வருட காலமாக பால் விநியோகத்துக்கு என்று புனரமைப்பு செய்யப்பட்டுள்ள முப்பது அடி நீளமான கட்டடம் எவ்வித பயன்பாடுமின்றி காணப்படுகின்றது.

இப் பால் சபைக்கான கட்டடம் கதவு போடப்பட்டு மின் விசிறிகள் பொருத்தப்பட்டு பல வருட காலமாக பயன்பாடின்றி காணப்படுவதால் கதவை பூட்டி விட்டு பலர் மது அருந்துவதுடன் இரவு வேளைகளில் பல சமூக விரோத செயற்பாடுகளும் அதிகமாக இடம் பெறுவதாக பலரும் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

எனவே இக் கட்டடம் அமையப் பெற்றுள்ள இடத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் புன்னைநீராவி அ.த.க. பாடசாலை அமைந்துள்ளதோடு ஐம்பது மீற்றர் தூரத்தில் புன்னைநீராவி கலைமகள் சிறுவர் முன்பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பொது நோக்கு மண்டபமும் அமைந்துள்ளது.

எனவே பலநூறு மாணவர்களின் நலன் கருதியும் முதியோர்கள், மக்களின் கோரிக்கைக்கு அமையவும் இக் கட்டடத்தை தங்களுக்கு நூல் நிலையமாக ஏற் படுத்தி தருமாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கட்டடம் நூலகமாக காட்சியளிக்கும் பட்சத்தில் பலரும் பலவகை நன்மை பெறக்கூடியதாக நிச்சயம் அமையும் என்று நம்பிக்கை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# மன்னார் நகர சபையில் பொங்கல் கொண்டாட்டம்



(மன்னார்)

மன்னார் நகர சபையின் பொங்கல் கொண்டாட்ட நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் மன்னார் நகர சபையில் இடம் பெற்றது. மன்னார் நகர சபை செயலாளர், மன்னார் நகரசபை உறுப்பினர்கள் ,உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஊழியர்கள் குறித்த பொங்கல் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (2-281)

# பாரதம்

## அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் பொலிஸார் உட்பட 47 பேர் காயம்



(அவனியாபுரம்)

அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 2 பொலிஸார் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 47 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மதுரை அரசு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவனியாபுரம் ஜல்லிக்கட்டு ஓய்வுபெற்ற நீதிபதி ராகவன் தலைமையிலும், மாவட்ட ஆட்சியர் நடராஜன், மாநகர ஆணையாளர் டேவிட்சன் தேவாசீர்வாதம், மாநகராட்சி ஆணையாளர் அனிஷ்சேகர் ஆகியோர் முன்னிலையிலும் தொடங்கியது.

விழாவில் புதிதாக நியமிக்கப்பட்ட குழுவினர் கலந்து கொண்டனர். ஜல்லிக்கட்டில் பதிவு செய்யப்பட்ட காளைகள் மருத்துவ பரிசோதனைக்கு பின் வாடிவாசல் பின்புறம் வரிசையாக நிறுத்தப்பட்டன. மாடுபிடி வீரர்கள் 75 பேர் வீதம் களத்தில் இறக்கப்பட்டனர்.

வாடிவாசலில் சீறிப் பாய்ந்து வந்த முரட்டுக்காளைகளை வீரர்கள் திமிலை பிடித்து அடக்கினர்.

சில காளைகள் பாய்ந்து வீரர்களை பந்தாடியது. மாடுபிடி உரிமையாளர் களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஜல்லிக்கட்டை பார்க்க கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பார்வையாளர்கள் குறைந்த அளவில் காணப்பட்டனர்.

ஜல்லிக்கட்டு காலை 8 மணி தொடங்கி 4 மணியளவில் முடிவடைந்தது. ஜல்லிக்கட்டு போட்டியில் 552 ஜல்லிக்கட்டு வீரர்களில் 2 பேர் நிராகரிக்கப்பட்டு 550 பேர் கலந்து கொண்டனர்.

ஜல்லிக்கட்டு போட்டி 8 சுற்றுகளாக நடைபெற்றது. இதில் 2 பொலிஸார் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 47 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் மதுரை அரசு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## அ.தி.மு.க. அரசை கவிழ்க்க ஸ்ராலின் முயற்சி - கே.பி.முனுசாமி



(சென்னை)

அ.தி.மு.க. அரசை கவிழ்க்க ஸ்ராலின் பல்வேறு வகையில் தொடர்ந்து முயற்சி செய்து வருவதாக அ.தி.மு.கவின் துணை ஒருங்கிணைப்பாளரான கே. பி. முனுசாமி குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து மேலும் தெரிவித்ததாவது,

டில்லியில் புலனாய்வு பத்திரிகை எனத் தெரிவித்துக் கொண்டு சிலர் தேவையற்ற கருத்துகளை வெளியிட்டுள்ளனர். கொடநாடு தொடர்பான வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ள நிலையில், தி.மு.க. தலைவர் ஸ்ராலின் தேவையற்ற புகார்களை தெரிவித்து வருகிறார்.

கொடநாடு விவகாரம் குறித்து சசிகலாவிடம் தான் கேட்கவேண்டும். முதல்வர் பழனிச்சாமியிடம் கேட்பதற்கு என்ன இருக்கிறது? ரஃபேல் ஊழல் விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி ராஜினாமா செய்யவேண்டும் எனக்கூற ஸ்ராலினுக்கு தைரியம் இல்லை. பொங்கல் திருநாளையொட்டி பரிசுப் பொருட்களுடன் ஆயிரம் ரூபா பரிசாக வழங்கியதை பொறுத்துக் கொள்ள முடியாத ஸ்ராலின் அ.தி.மு.க. அரசை கவிழ்க்க பல்வேறு வழிகளில் தொடர்ந்து முயற்சிக்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுங்கள்

### உறுப்பினர்களிடம் பிரிட்டன் பிரதமர் தெரேசா மே வலியுறுத்து

(லண்டன்)

பிரெக்ஸிற்றுக்கு ஆதரவாக வாக்களித்த பிரித்தானிய மக்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரதமர் தெரேசா மே மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் தெரேசா மே-யினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரெக்ஸிற் திட்டம் 230 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தோல்வியை தழுவியது.

வரலாற்று தோல்வியை தொடர்ந்து பிரதமர் சபையில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர்,

"வாக்கெடுப்பின் முடிவுகளின்படி பிரெக்ஸிற் திட்டத்திற்கு நாடாளுமன்ற த்தின் ஆதரவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

ஆனால், பிரித்தானியாவிலுள்ள ஐரோப் பிய ஒன்றிய குடிமக்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தி லுள்ள பிரித்தானியர்கள் ஆகியோருக்கு இந்த பிரச்சினைக்கு தெளிவான முடிவொன்று அவசியமாகும்.

இந்நிலையில், அரசாங்கம் எவ்வாறு செயற்பட விரும்புகிறது என்பதை சுருக்கமாக விளக்குகிறேன். உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை முன்வைக்க தீர்மானித்துள்ளது.

இதன்போது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை நிரூபிக்கப்படின், நாடாளுமன்றத்தின் ஆதரவை பெறும் வகையில் சக கட்சியினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். இந்த பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுப்பதுடன், பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமான வகையில் அமையும் நிலையில், அவை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஆராயப்படும்.

ஒரு சிறந்த ஒப்பந்தத்துடன் ஒழுங்கான முறையில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதே சிறந்த வழி என்பதில் நான் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

இந்நிலையில், பிரெக்ஸிற்றுக்கு ஆதரவாக இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் வாக்களித்த மக்களின் குரலுக்கு செவிமடுக்குமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கோருவதுடன், அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறும் வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்தார். (4-7)

## அமெரிக்காவின் ... சிரியாவில் பா...

(வோஷிங்டன்)

அதிகரித்துவரும் பதற்றங்களை குறைக்கும் வகையில் வடக்கு சிரியாவில் பாதுகாப்பு வலயமொன்றை ஸ்தாபிக்க துருக்கி தீர்மானித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பரிந்துரைக்கமைய இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக துருக்கி ஜனாதிபதி தையீப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்புடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆக்கபூர்வமான தொலைபேசி உரையாடலின் போது சிரிய எல்லைக்கு அருகே 32 கிலோமீற்றர் பாதுகாப்பு வலயமொன்று துருக்கி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட வேண்டும் என ட்ரம்ப் பரிந்துரைத்தாக எர்டோகன் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த உரையாடலின் போது அமெரிக்க ஜனாதிபதியுடன் வரலாற்று ரீதியான புரிந்துணர்வு

## பிரெக்ஸிற் வாக்கெடு...

(லண்டன்)

பிரெக்ஸிற் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக, பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பிரதமர் தெரேசா மேயின் தரப்பு தோல்வியடைந்தது.

ஐரோப்பிய. ஒன்றியத்திலிருந்து விலகுவது தொடர்பான பிரெக்ஸிற் மீதான வாக்கெடுப்பில் 432 பேர் பிரெக்ஸிற்றிற்கு எதிராகவும் 202 பேர் பிரெக்ஸிற்றிற்கு ஆதரவாகவும் வாக்களித்தனர்.



இதன்மூலம் மேயின் தரப்பு 230 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது தொடர்பாக முடிவுசெய்யும் பொதுவாக்கெடுப்பு கடந்த 2016 ஆம் ஆண்டு நடை

## சீனா அனுப்பி... பருத்தி வி...


(பீஜிங்)

நிலவின் மறுபக்கத்திற்கு சீனா அனுப்பிய விண்கலத்தில் இருந்த பருத்தி விதை முளைக்க தொடங்கியுள்ளது.

சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையம் கடந்த சில நாட்களுக்கு முன் சாங் இ-4 என்ற விண்கலம் அனுப்பி உள்ள நிலையில், அதன் மூலம் நிலவின் குளிர் நிலையை ஆய்வு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

நிலவின் பின் பகுதியை யாராலும் பார்க்க முடியவில்லை. இதுவரை பல்வேறு ஆராய்ச்சிகள் உலக நாடுகள் செய்து வந்தாலும் நிலவின் பின்பகுதியை ஆய்வு செய்வது குறித்து முதலில் தொடங்கியது சீனாதான்.

இதற்காக கடந்த மாதம் 8ஆம் திகதி சாங் இ-4 என்ற விண்கலத்தை நிலவுக்கு அனுப்பியது. அந்த விண்கலம் இந்த மாதம் 3ஆம் திகதி நிலவின் இருண்ட பகுதி என்று தெரிவிக்கப்படும் யாரும் பார்த்திராத பகுதி யில் இறங்கியது. நிலவின் மறுபக்கத்தில் யாரும் இதுவரை



கண்டிராத புகைப்படங்களை சீனா விண்வெளி மையத்திற்கு அனுப்பியது.

நிலவில் பூமியை போல் இல்லாமல் சற்று மாறுபட்டே கால சூழல் அமைகிறது. அதாவது பூமியின் கணக்குப்படி 14 நாட்கள் இரவாகவும், 14 நாட்கள் பகலாகவும் நிலவில் இருக்கும்.

பகலில் அதிக வெப்பமாகவும் இரவில் கடும் குளிராகவும் இருக்கும். அதாவது விஞ்ஞானிகளின் கணக்குப்படி பகலில் 127டிகிரி செல்சியஸ் வெப்பமாகவும், இரவில் -183 டிகிரி செல்சியஸ் உறை பனியாகவும் இருக்கிறது என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் விண்கலம் பழுதடையாமல் இருக்க அதில் உள்ள வெப்பமூட்டிகள் தொடர்ந்து இயக்கப்படும்

# ...ின் பரிந்துரைக்கமைய ...பாதுகாப்பு வலயம்

## துருக்கி அறிவிப்பு

எட்டப்பட்டதாக தெரிவித்த ஜனாதிபதி எர்டோகன், அது குறித்து விளக்கமளிக்க மறுத்துள்ளார்.

சிரியாவிலிருந்து தமது துருப்புக்களை திரும்பப் பெறுவது தொடர்பான அமெரிக்காவின் அறிவிப்பினால் ஏற்பட்ட கடும் முரண்பாடுகளுக்கு மத்தியில் இந்த தொலைபேசி உரையாடல் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிரியாவில் அராஜகம் செய்து வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா ஆட்சிக் காலத்தில் அமெரிக்க படையினர் சிரியாவிற்குள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தற்போது சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை தோல்வியுற செய்து விட்டதாக தெரிவித்து அமெரிக்க படையினரை மீளப் பெறுவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடியாக தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து சிரியாவிலுள்ள குர்திஷ் படைகள் மீது இராணுவத் தாக்குதல் நடத்த உள்ளதாக துருக்கி அறிவித்தது.

இந்த விவகாரம், அமெரிக்கா, துருக்கி இடையே மோதல் சூழலை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# ...கெடுப்பில் தெரேசா மே தோல்வி



பெற்றது.

இதில் பெரும்பாலானோர் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக ஆதரவு தெரிவித்தனர். பிரித்தானியாவின் இந்த வெளியேற்ற முடிவே பிரெக்ஸிற் எனக் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கான செயற்பாடு 2019 ஆம் ஆண்டின் மார்ச் 29 ஆம் திகதிக்குள் நிறைவுசெய்யப்பட வேண்டும். ஆனால், இதுவரை அதற்கான விதிகள் வகுக்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பிரெக்ஸிற்றை அமுல்படுத்தத் தேவையான விதிகளை விரைந்து வகுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மே அறிவுறுத்தியிருந்தார்.


மேலும் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தோல்வியடைந்தால், அது மன்னிக்க முடியாத நம்பிக்கை மீறல் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே நேற்றைய பிரெக்ஸிற் வாக்கெடுப்பில் பிரதமர் மேயின் தரப்பு படுதோல்வியடைந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவதற்கான காலம் முடிவடைய இன்னும் 10 வாரங்களே உள்ளதால் தெரேசா மே அரசாங்கத்திற்கு இது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# ...பிய விண்கலத்தில் ...தை முளைத்தது!





என்றும், அந்த கருவிகள் உருவாக்கும் மின்சக்திகள் பெற்று நிலவின் குளிர் நிலையை துல்லியமாக ஆய்வு செய்ய உள்ளதாகவும் விண்வெளி ஆய்வு மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அங்கு உயிர் வாழ்வதற்கான சூழ்நிலை இருக்கின்றதா என்றும் ஆய்வுகள் நடக்கின்றது. இதற்காக தனது விண்கலனை வித்தியாசமான முறையில் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது. புதிய பரிமாணத்தில் ஆய்வும் நடந்து வருகின்றது.

நிலவின் மறுபக்கத்தில் உள்ள பெருங்குழியில் ஆய்வு நடைபெறுவதாகவும், இந்த ஆய்வில், நிலவின் தரையில் என்னென்ன தனிமங்கள் உள்ளன. அங்கு கதிர் வீச்சு எப்படி உள்ளது, சூழல் எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் ஆராய்ந்து வருவதாக சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆய்வு செய்து வரும் பணிகளை தனது விண்கலன்கள் மூலம் நேரலையில் சீன விஞ்ஞானிகள் கண்காணித்து வருகின்றனர். இது விண்வெளி ஆய்வில் வித்தியாசமான முயற்சியாகவும் இருந்து வருகின்றது.

நிலவில் உயிரியல் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஒரு பெட்டிக்குள் உருளைக் கிழங்கு, பருத்தி விதைகள், மற்றும் பட்டுப்பூச்சி முட்டைகள் மூன்று கிலோ கொண்ட கொள்கலனில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சீனா சாங் இ-4 மூலம் ஆய்வுக்காக கொண்டு சென்ற பருத்தி விதைகள் முளைக்க ஆரம்பித்துள்ளன.

சாங் இ-4 எடுத்து அனுப்பிய புகைப்படங்களில், பருத்தி விதை முளைக்க தொடங்கி உள்ளதை காட்டியது. ஆனால் வேறு எந்த தாவரங்களும் முளைப்பது காணப்படவில்லை. இது வரை 170 க்கும் மேற்பட்ட படங்கள் கமராக்கள் மூலம் எடுக்கப்பட்டு பூமிக்கு அனுப்பப்பட்டு உள்ளது என இந்த குழு தெரிவித்துள்ளது. (4-7)

# கென்யாவில் பயங்கரவாதிகள் தாக்குதல் பலி எண்ணிக்கை 15 ஆக உயர்வு

(நைரோபி)

கென்ய தலைநகர் நைரோபியில் அல் ஷபாப் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

தாக்குதலில் பலர் காயமடைந்துள்ள நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்தவர்களில் 11 பேர் கென்யர்களும், ஒரு அமெரிக்கரும், பிரித்தானியரும் உள்ளடங்குவதாகவும் ஏனைய இருவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கர் ஒருவர் உயிரிழந்திருப்பதை அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் உறுதிபடுத்தியுள்ளார். நைரோபியில் பாதுகாப்புமிக்க அலுவலக தொகுதிகள் அமைந்துள்ள பகுதி மற்றும் நட்சத்திர விடுதிக்குள் நுழைந்த சுமார் நான்கு ஆயுததாரிகள் அங்கு துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன், கைக்குண்டுகளையும் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் விடுதி வளாகத்தின் வெளியே நிறுத்தப்பட்ட வாகனங்களும் தீக்கிரையாகின.



பயங்கரவாதத் தாக்குதலை தொடர்ந்து அங்கு விரைந்த பொலிஸார் விடுதியில் இருந்தவர்களை பாதுகாப்பாக மீட்டு வெளியேற்றியமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# கேமரூனில் துப்பாக்கி முனையில் 36 பயணிகள் கடத்தல்



(யாவுண்டே)

கேமரூனின் தென் மேற்கு பிராந்தியத்தில் துப்பாக்கி முனையில் 36 பயணிகள் கடத்தப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான கேமரூனில், ஆங்கிலம் பேசும் மக்கள் அதிகம் வாழும் தென்மேற்கு மற்றும் வடமேற்கு பிராந்தியங்களை தனி சுதந்திர நாடாக அறிவிக்க வலியுறுத்தி, பிரிவினைவாத அமைப்புகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் அவர்களை ஒடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் காரணமாக அரசுப் படைகளுக்கும், பிரிவினைவாத அமைப்புகளுக்குமிடையே தொடர்ந்து போர் நடைபெற்றுவருகிறது.

இந்நிலையில் தென் மேற்கு பிராந்தியத்தில் பியூவா-கும்பா நெடுஞ்சாலையில் சென்ற பயணிகள் பேருந்தை, ஆயுதம் தாங்கிய கும்பல் நேற்று முன்தினம் தடுத்து நிறுத்தியது. பின்னர், பயணிகளின் அடையாள அட்டைகளை பறித்த அந்த கும்பல் அனைவரையும் கீழே இறக்கி, துப்பாக்கியைக் காட்டி மிரட்டி கடத்திச் சென்றது.

பேருந்து சாரதியை, கும்பா பேருந்து நிலையத்திற்கு திரும்பி செல்லும்படி, அந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் மிரட்டி அனுப்பியுள்ளனர்.


பேருந்துச்சாரதி கொடுத்த தகவலின் அடிப்படையில் கடத்தப்பட்ட பயணிகளை மீட்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். சம்பவ இடத்திற்குச் சென்று, நெடுஞ்சாலையில் போக்குவரத்தை தடை செய்து அனைத்து வாகனங்களையும் சோதனையிட்டனர். ஆனால், கடத்தப்பட்டவர்கள் குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.

இந்த பிராந்தியங்களில் ஆட்கடத்தல் சம்பவம் அதிகரித்து வருகிறது. இதற்கு ஆயுதம் தாங்கிய பிரிவினைவாதிகள் தான் காரணம் என அரசு குற்றம்சாட்டுகிறது.

ஆனால், தங்கள் சுதந்திரப் போராட்டத்தை சர்வதேச அளவில் களங்கப்படுத்தும் வகையில், அரசாங்கத்தால் இந்த கடத்தல் சம்பவம் திட்டமிட்டு நடத்தப்படுவதாக பிரிவினைவாதிகள் தெரிவித்துள்ளார்கள். (4-7)

# புதிய அரசியலமைப்பை தயாரிக்க எந்தத் தேவையும் அரசிடமில்லை

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு




(கொழும்பு)

புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான எந்தத் தேவையும் அரசாங்கத்திடம் இல்லை. மகிந்த ராஜபக்ஷ காலத்தில் அமைக்கப்பட்ட சர்வகட்சி குழுவின் பரிந்துரைகளை முன்னெடுத்துச்சென்றிருந்தால் இப்போது அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு நிதி நகரத் திட்டத்திற்கான நிலப்பரப்பை உருவாக்கும் பணி நிறைவு



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகருக்கான நிலத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்திருப்பதாக. பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடலிலிருந்து நிலப்பரப்பை உருவாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்தகட்டமாக இங்கு கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

முன்னதாகத் துறைமுக நகர் எனப் பெயரிடப்பட்ட இந்தத் திட்டம் தற்போது கொழும்பு நிதி நகரத் திட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய கடலிலிருந்து. 269 ஹெக்டேயர் நிலப்பரப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு. வதிவிட மற்றும் வணிக மையமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

கடலிலிருந்து உருவாக்கப்படும் 269 ஹெக்டேயர் நிலப்பகுதியில் 116 ஹெக்டேயர் நிலம், சீன நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

மிகுதி நிலப்பரப்பு இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமாக இருக்கும். அதில் 61 ஹெக்டேயரில் நிதி நகரத்தை அமைக்கப் பயன்படுத்தப்படும்.

ஏனைய 91 ஹெக்டேயர் பொதுப் பயன்பாட்டுக்கான பகுதியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஐ.நா.நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை கையாளும் பல்கலை.முயற்சி பாராட்டத்தக்கது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



(மொறட்டுவ)

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் கையாள்வதற்கு, அனர்த்த அபாயங்களைக் குறைப்பது தொடர்பான கல்விசார் ஆய்வுகளில் பல்கலைக்கழகங்கள் உற்சாகத்துடன் ஈடுபடுவது வரவேற்கத்தக்க முயற்சியாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மொறட்டுவமற்றும்கொழும்பு பல்கலைக்கழகங்கள் இணைந்து சினமன் லேக் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடத்திய சர்வதேச ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான திறன் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் வழிகோலும் முகமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் இங்கிலாந்து, சுவீடன், லித்துவேனியா, எஸ்ரோனியா, இலங்கை, பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து முதலிய நாடுகள் உள்ளிட்ட பல்கலைக்கழகங்கள் ஐரோப்பிய ஆசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்திருக்கும் "எஸ் சேனட் திருவிழா - 2019" எனும் ஆய்வு மாநாட்டில் கலந்து கொள்வது மகிழ்ச்சியளிக்கிறது.

பல பல்கலைக்கழகங்கள் ஒன்றிணைந்து நடத்தும் அனர்த்த முகாமைத்துவ ஆளுமை விருத்தி மற்றும் புத்தாக்கம் தொடர்பான சர்வதேச மகாநாடு மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகும். இம்முயற்சியானது தகவல்களை வழங்குவது மட்டுமன்றி, இதுதொடர்பான அறிவூட்டலில் ஈடுபடுவதும் மற்றும் திறன் அபிவிருத்தி, தலைமைத்துவம் முதலான பயிற்சிகளை வழங்குதல் என்பனவற்றில் பரஸ்பரம் உதவும் நிலையில் அமைந்துள்ளது.

இந்த ஆராய்ச்சி மாநாடானது எவ்வித சந்தேகத்துக்கிடமற்ற முறையில் உள்நாட்டிலும் பிராந்தியத்திலும் மற்றும் சர்வதேசத்திலும் பயன்தரக்கூடிய ஒரு முயற்சியாகும். அனர்த்தம் தொடர்பான முன்னறிவிப்பு முயற்சிகளுக்கான விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் பற்றி நாம் இத்தருணத்தில் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் காலநிலை, அனர்த்தங்கள் மற்றும் சவால்கள் என்பனவற்றில் முன்னறிவிப்புச் செய்யும் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குவது முக்கியமானதாகும். இவற்றைக் கையாள்வதற்கு அனர்த்த அபாயங்களைக் குறைப்பது தொடர்பான கல்விசார் ஆய்வுகளில் பல்கலைக்கழகங்கள் உற்சாகத்துடன் ஈடுபடுவது பெரிதும் போற்றத்தக்க முயற்சியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சொந்த சிந்தனை!

"அவன் ஆயிரம் சொல்லுவான். உன் புத்தி எங்கே போச்சு?" என்று யாராவது உங்களைத் திட்டியிருக்கிறார்களா? மற்றவர்கள் அப்படிச் சொல்லும் அளவுக்கு நீங்கள் எப்போதாவது நடந்துகொண்டிருக்கிறீர்களா? அப்படி என்றால்... இதைக் கொஞ்சம் கேளுங்கள்.

ஒரு ஊரில் ஒருத்தன் புதிதாக ஒரு மீன் கடை ஆரம்பித்தான். புதிதாகக் கடை வைத்திருக்கிறான். அது எல்லோருக்கும் தெரியவேண்டும் இல்லையா? அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான். உடனே ஒரு விளம்பரப் பலகை ஒன்று தயார் செய்தான்.

அதில் அழகாக ஒரு மீன் படத்தை வரைந்தான். அதற்குக் கீழே "நல்ல மீன் இங்கே விற்கப்படும்" என்று எழுதி... அந்த போட்டை கடைவாசலில் வைத்துவிட்டான்.

இதுவரைக்கும் சரி! அதற்குப் பின்னர் என்ன ஆனது தெரியுமா? அவன் சிநேகிதன் ஒருத்தன் அந்தப் பக்கமாக வந்தான். இந்தப் "போட்டை" பார்த்தான். அதற்குப் பின்னர் கடைக்காரனைப் பார்த்தான்!

"ஏனப்ப... நீ வேறு எங்கையாவது கடை வைத்திருக்கிறாயா?" என்று கேட்டான். "இல்லையே!" என்றான் கடைக்காரன். "அப்படி என்றால் தேவையில்லாமல் எதற்காக இந்த போட்டில் "இங்கே" ஒரு வார்த்தையைச் சேர்த்திருக்கிறாய்! அதை அழித்துவிடு!" என்றான்.

கடைக்காரன் பார்த்தான். அவன் சொன்னதும் நியாயமாகத்தான்படுகிறது! உடனே அந்த வார்த்தையை அழித்து விட்டான். இப்போது படித்துப் பார்த்தான். மீன்படம் அதற்குக் கீழே "நல்ல மீன் விற்கப்படும்!" என்று இருந்தது.

அடுத்தபடியாக இன்னொருத்தன் வந்தான். போட்டைப் பார்த்தான். பின்னர் கடைக்காரனைப் பார்த்தான். "ஏனப்பா! நீ கெட்டுப்போன மீனையும் விற்பதுண்டா என்று?" கேட்டான். "இல்லையே!" என்றான் இவன்.

"பின்னர் எதற்காக "நல்ல" என்று ஒரு வார்த்தை அதில்! அழித்துவிடு!" என்றான். அதுவும் சரியாகத்தான் பட்டது. அழித்துவிட்டான். இப்போது அந்தப் போட்டில் மீன்படம் அதற்குக் கீழே "மீன் விற்கப்படும்" அவ்வளவுதான்.

இன்னொருத்தன் வந்தான். போட்டைப் பார்த்தான். பின்னர் நிமிர்ந்து கடைக்காரனைப் பார்த்தான். "ஏனப்பா... அதுதான் "மீன்" என்று எழுதியிருக்கிறதே பின்னர் எதற்காக அந்த "மீன்படம்" அதற்கு மேலே! வேண்டாமே!" என்றான். "அதுவும் சரிதானே!" என்று நினைத்தான் இவன்.

உடனே மீன் படத்தையும் அழித்தாச்சு. இப்போது போட்டில் இருந்தது "மீன் விற்கப்படும்!" அவ்வளவு தான். அத்தோடு விட்டார்களா? அடுத்ததாக ஒருத்தன் வந்தான். "என்னப்பா மீனை யாருக்காவது இனாமாக வேறு கொடுத்துக் கொண்டிருக்கிறாயா?" என்றான்.

"இல்லையே!" என்றான். "பின்னர் "எதற்காக விற்கப்படும்" என்று ஒரு வார்த்தை அதில்?" என்றான். "சரி" என்று இவன் அதையும் அழித்துவிட்டான். இப்போது அந்த பலகையில் "மீன்" என்னும் ஒரே வார்த்தை தான் இருந்தது! அடுத்தாற்போல ஒருத்தன் வந்தான்.

"ஏனப்பா? அதுதான் தூரத்தில் வரும்போதே மீனுடைய வாசனை மூக்கைத் துளைக்கிறதே! அது போதாதா? "மீன்" என்று போட்டில் எழுதி வேறு வைக்கவேண்டுமா?" என்றான்.

கடைக்காரன் அதையும் அழித்துவிட்டு இப்போது வெறும் பலகையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டான்! இப்போது இன்னொருத்தன் வந்தான். "ஏனப்பா! என்ன இப்படி கடைக்கு முன்னாள் வெறும் பலகையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்! இதில் அழகாக ஒரு "மீன்" படம் வரைந்து அதற்குக் கீழே "நல்ல் மீன் இங்கே விற்கப்படும்!" என்று எழுதிவைத்தால் எவ்வளவு நல்லா இருக்கும்?" என்றான்.

அந்தக் கடைக்காரனுக்கு இதுவும் ஒரு நல்ல யோசனையாகத்தான் பட்டது! இப்படிப்பட்ட ஆசாமிகளுக்கு போட்டை அழித்து எழுதிக்கொண்டிருக்கத்தான். நேரம் சரியாக இருக்கும்! வியாபாரத்தைக் கவனிப்பதற்கு நேரம் இருக்காது! அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்கவே கூடாது என்று நான் சொல்ல வரவில்லை!

கேட்டு அதுபோல நடப்பதற்கு முன்னால் கொஞ்சம் சொந்தமாகவும் சிந்திக்கவேண்டும் இல்லையா! "எண்ணித் துணிக கருமம்!" என்றுதான் திருவள்ளுவர் சொன்னார். "கேட்டுத்துணிக கருமம்!" என்று சொல்லவில்லை! இப்போது நெருப்பைத் தொட்டுக் கையைச் சுட்டுக்கொள்கிறீர்கள்! "என்னங்க இப்படி சுட்டுக்கொண்டீர்கள்" என்று கேட்டால்...

"அடுத்த வீட்டுக்காரர்தான் சொன்னான், நெருப்பைத் தொட்டுப் பார்க்கச் சொல்லி! அதுதான் தொட்டுப் பார்த்தேன்!" என்றா சொல்வீர்கள்!இப்போது மருந்து போடுவதற்கு அடுத்தவீட்டுக்காரனா வருவான்!

ஒருத்தர் சின்னதாக சிம்பிளாக ஒரு வீடு கட்ட ஆரம்பித்தார். கூரைவீடு போதும் என்று தான் நினைத்தார். ஒருத்தர் சொன்னார்... "கட்டுவது தான் கட்டுகிறாய்! அத்திபாரத்தைப் பலமாகவே போடு!" என்றார். இவரும் பலமாகப் போட்டார்.

"இன்னொருத்தர் சொன்னார்... அத்திபாரம் பலமாக போட்டாச்சு... அதற்கு மேலே என்னத்துக்கு மண் சுவரை எழுப்புகிறாய்... செங்கல் சுவராகவே எழுப்பிவிடு!" என்றார்.

"செங்கல் வைத்து சுவர் எழுப்பியதற்கு பின்னர் பூசாமல் இருந்தால் நல்லா இருக்காது... சீமெந்து வாங்கிப் பூசி விடு!" என்றார் இன்னொருத்தர்.

"இவ்வளவு தூரம் ஆகிவிட்டது... இதற்குமேலே கூரையைப் போட்டால் நல்லா இருக்காது... ஓட்டு வீடாகவே ஆக்கிவிடுவதுதான் நல்லது!" என்றார் இன்னொருத்தர். எல்லோரும் சொல்வதும் இவருக்கு நியாயமாகவேபட்டது! அப்படியே செய்தார். கொஞ்ச நாள் கழித்து ஒரு கடைத்தெருவில் அந்த ஆள் நின்றுகொண்டிருந்தார்.

"என்னங்க இப்போது எந்த மட்டத்தில் இருக்கிறது?" என்று கேட்டார் ஒருத்தர். "தலைக்கு மேலே போய்விட்டது" என்றார் வீட்டைக் கட்டியவர். "எது? வீடா?" என்று கேட்டார் இவர். "இல்லை கடன்" என்று சொன்னார் அவர். சொந்தச் சிந்தனை இல்லை என்றால் இப்படித்தான்!

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2019 முதல் 12.02.2019 வரை

## சவால்களை சமாளிக்க வேண்டிய நேரம்!






**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

விளம்பி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் ராகுவும் 8 ஆம் இடத்தில் கேதுவும் இருக்கிறார்கள். கேதுவோடு புதனும் சூரியனும் இணைந்திருக்கிறார்கள். எனவே சவால்களைச் சமாளிக்கும் சூழ்நிலை உருவாகும். சில நேரங்களில் மனக்கவலையும் சில நேரங்களில் மகிழ்ச்சியுமாக மனநிலை மாறி மாறி வரும். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஒரு நேரத்தில் இருந்த நிலைப்பாடு மற்றொரு நேரத்தில் இருக்காது. வரவு- செலவுகளில் கொஞ்சம் கனவமுடன் இருப்பது நல்லது. மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் என்றாலும் கூட, புதன் அஸ்தமனத்தில் அல்லவா இருக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லையும் கூடுதலாகவே இருக்கும். ஏதேனும் நோய்க்கான அறிகுறி தென்பட்டால்உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

தொழில் ஸ்தானத்தில் இருக்கும் செவ்வாயை குரு பகவான் பார்க்கிறார். குரு மங்கள யோகம் செயற்படுகின்றது. 6 ஆம் இடத்தில் வீற்றிருக்கும் குரு பகவான் 12 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரனோடு இணைந்திருப்பதால் பழைய தொழிலிலிருந்து விடுபடும் வாய்ப்புண்டு. அதாவது பங்குதாரர்களால்பிரச்சினைகள் ஏற்பட்டு, அவர்கள் வசமே பழைய தொழிலைக் கொடுத் துவிட்டுப் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஒருசிலர் ஆர்வம் காட்டக் கூடும். எப்படிப் பார்த்தாலும் நீங்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் சரி எந்தத் துறையில் பணிபுரிபவர்களாக இருந்தாலும் சரி உடனிருப்ப வர்கள் நம்பிக்கைக்குரிய விதத்தில் நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம் தான்.

எனவே அப்போதைக்கு அப்போது கணக்கு வழக்குகளை பரிசீலனை செய்து பார்த்துக்கொள்வது நல்லது. விரைவில் ராகு கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக உங்களுக்குச் சோதனைகளைக் கொடுத்த ராகு கேதுக்கள், பெயர்ச்சிக்குப் பிறகு சாதனைகள் நிகழ்த்தும் விதத்தில் பல நல்ல வாய்ப்புகளை உங்களுக்கு வழங்குவார்கள். அதுவரை எந்த ஒரு காரியத்தை யும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்யுங்கள்.

கடமையில் கொஞ்சம் தொய்வு ஏற்படலாம். கண்ணியம் மிக்க நண்பர்களின் ஆலோசனை அப்போதைக்கு அப்போது கைகொடுக்கும். புண்ணிய காரியங்களுக்கு பொருட்களை வழங்குவதன் மூலமும் ஆன்மீகப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலமும் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள முடியும்.

பொதுவாக இம்மாதம் வடக்கு நோக்கிய விநாயகரை வழிபடுவதுடன் சர்ப்பக் கிரகங்களுக்குரிய சிறப்பு வழிபாடுகளையும் மேற்கொண்டால் எப்பொழுதும் இனிய பலன்கள் நடைபெறும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

ஜனவரி 30 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 12 இற்கு அதிபதியான சுக்கிரன் சப்தம ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது கல்யாணக் கனவுகள் நனவாகும். நீண்ட நாட்களாக வரன்கள் வந்து வந்து கைவிட்டுப் போகின்றதே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகலாம். பணிபுரியும் இடத்திலிருந்து வந்த பனிப்போர் விலகும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டு முயற்சி கைகூடலாம். வசதிகளைப் பெருக்கிக் கொள்ள கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். குறிப்பாக விரயாதிபதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்கப் பாடுபடுவீர்கள்.

மேஷ செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பெப்ரவரி முதல் திகதி மேஷ இராசிக்குச் செல்கிறார். லாபாதிபதி செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சியில் நல்ல தகவல் வரலாம். பொன், பொருள், விலை உயர்ந்த மின்சாதனங்கள் போன்றவை வாங்கும் முயற்சி கைகூடும். திறமை பளிச்சிடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட நாட்களாக செய்த வெளிநாட்டு முயற்சியில் தற்போது வெற்றி கிட்டும். இளைய சகோதரர்களுடன் ஏற்பட்ட பகை மாறிப் பாசம் கூடும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். இதுவரை உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளாத பிள்ளைகள், இப்பொழுது உங்கள் சொற்படி கேட்டு நடப்பார்கள்.

கும்ப புதன் சஞ்சாரம்

பெப்ரவரி முதல் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கும் சுக ஸ்தானத்திற்கும் அதிபதியான புதன் 9 ஆம் இடத்திற்குச் செல்லும் பொழுது யோகமான நேரமாகும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உற்றார், உறவினர்கள் உங்கள் பணிக்கு ஒத்துழை ப்பு செய்வர். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும் தாயின் உடல்நலம் சீராகும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனம் வாங்குவீர் கள். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். தற்கால பணியில் வேலைக்குச் சேர்ந்தவர்கள் இப்பொழுது நிரந்தர பணிக்கு மாற்றப்படுவர். இம் மாதம் ஆதியந்தப் பிரபு வழிபாட்டை சனிக்கிழமை தோறும் மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து சேரும். பண வரவு திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கணவன் மனைவிக்குள் கனி வும் பாசமும் கைகூடும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பார்கள். தாய் வழித் தனலாபம் வருவதில் இருந்த தடை அகலும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். பணிபுரியும் பெண்களுக்கு அலுவலகத்தில் நல்ல பெயர் கிடைக்கும். உங்கள் திறமையைக் கண்டு மேலதிகாரிகள் பாராட்டுவர். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிரதோஷ வழிபாடும், ராகு கேது பிரீதியும் தடைகளைத் தகர்த்தெறியும்.

## நட்பு வட்டம் கைகொடுத்து உதவும்






விளம்பி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே ராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். உங்கள் இராசியையும் 9, 11 ஆகிய இடங்களையும் குரு பகவான் பார்க்கிறார். எனவே மாதம் முழுவதும் மகிழ்ச்சி தரும் விதத்தில் பல நல்ல காரியங்கள் நடைபெறப் போகிறது. பொதுவாகத் தடைகளும் தாமதங்களும் அகல வேண்டுமானால் குரு பகவானின் பார்வை நமது இராசியில் பதிய வேண்டும். மேலும் உங்கள் இராசியைத் தனாதிபதி சூரியன் பார்க்கின்றார். எனவே பணப் புழக்கத்திற்கு குறைவிருக்காது. நல்ல திருப்பங்களும் மிகுந்த முன்னேற்றமும் வருவதற்கான வாய்ப்புகள் தென்படும்.

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், 9 ஆம் இடத்தில் இருப்பதால் பெற்றோர் வழி உறவில் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைச் செல்வங்களாலும் நன்மை கிடைக்கும். முதுகலைப் பட்டம் பெற்றும், வேலை கிடைக்காமல் பிள்ளைகள் வீட்டில் இருக்கிறார்களே என்று கவலைப்பட்டவர்களுக்கு, அந்தக் கவலை இனி மாறும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். அண்ணன், தம்பிகளின் அரவணைப்பும் உண்டு. பாச மழையிலும் பண மழையிலும் நனைவீர்கள். உதிரி வருமானங்கள் பெருகும். எடுக்கும் முயற்சிகளில் எல்லாம் வெற்றி கிடைக்கப் போகின்றது.

அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கைகொடுக்கும். மேலிடத்தில் உள்ளவர்களின் நிர்ப்பந்தம் காரணமாக, ஒருசிலர் வேறு அணிக்கு மாறும் சூழ்நிலை உருவாகும். வாழ்வில் இனி ஏறுமுகம் தான். ஏழாம் இடத்தில் சூரியன், புதன், கேது இணைந்திருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்பட்டால் குடும்பப் பிரச்சினைகள் ஏற்படாது. புத ஆதித்ய யோகம் இருப்பதால் மாமன் மைத்துனர் வழியே அனுகூலங்கள் ஏற்படும். சேமிப்பு கரைந்தாலும் மீண்டும் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் அளவிற்கு தொழில் வெற்றி நடைபோடப் போகிறது.

இன்னும் சில நாட்களில் ராகு கேதுக்களும் பெயர்ச்சியாகப் போவதால், அதன்பிறகு உங்கள் வீட்டில் வெற்றிக் கொடி பறக்கப் போகிறது. ஜென்ம ராகுவும் சப்தம கேதுவும் மாறப் போகிறார்கள். இந்த பாம்புக் கிரகங்களின் மாற்றத்திற்குப் பிறகு இன்னும் உயர்ந்த நிலையை அடையப்போகிறீர்கள். அதற்குள்ளாக அனுகூலமான நட்சத்திரத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்தால் வாய்ப்புகள் வரிசையாக வந்து நிற்கும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

ஜனவரி 30 ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 இற்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஜீவன ஸ்தானம் பலம் பெறுகின்றது. எனவே உத்தியோக முயற்சிகள் கைகூடும். படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு, இப்பொழுது பொருத்தமான வேலை கிடைத்து பொருளாதார நிலை உயரும். தற்காலிகப் பணியில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தரமாகும். வழக்குகளில் சாதகமான நிலை ஏற்படும். கடன் சுமை குறைய புதிய முயற்சிகள் கைகொடுக்கும். மன அழுத்தம் விலகும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

மேஷ செவ்வாய் சஞ்சாரம்

பெப்ரவரி முதல் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். எதிர்பாராத பதவி வாய்ப்புகளும் புதிய பொறுப்புகளும் தானாகவே தேடி வரும். தொழில் தொடங்க விரும்புபவர்களுக்கு அரசு வழி ஆதரவு அல்லது நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வீடு, வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. மதிநுட்பத்தோடு செயலபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் பலம் பெறுவதால், ஒரு சில பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். வாடகை இடத்தில் தொழில் நடத்துபவர்கள் இப்போது அதை விலைக்கு வாங்கி சீரமைப்பு செய்ய முன்வருவர். எதிரிகளின் பலம் குறையும்.

கும்ப புதன் சஞ்சாரம்

பெப்ரவரி முதல் திகதி உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் கும்ப இராசிக்குச் செல்கிறார். 12 இற்கு அதிபதி 8 இல் சஞ்சரிக்கும் போது விபரீத இராஜயோக அடிப்படையில் பல நல்ல சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். திடீர்த்திருப்பங்களும் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றியும் கிடைக்கும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். வெளிநாட்டு யோகம் கைகூடும். வீடு மாற்றங்களும் நாடு மாற்றங்களும் வந்து சேரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

இம்மாதம் செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொண்டால் துயரங்கள் துள்ளி ஓடும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து சேரும். பண வரவு திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கணவன்-மனைவிக்குள் கனிவும் பாசமும் கைகூடும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பார்கள். தாய் வழித் தனலாபம் வருவதில் இருந்த தடை அகலும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். பணிபுரியும் பெண்களுக்கு அலுவலகத்தில் நல்ல பெயர் கிடைக்கும். உங்கள் திறமையைக் கண்டு மேலதிகாரிகள் பாராட்டுவர். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிரதோஷ வழிபாடும், ராகு கேது பிரீதியும் தடைகளைத் தகர்த்தெறியும்.

(தொடரும்)

# பணமோசடி இந்தியர் கைது

(வத்தளை)

வத்தளை - ஹெந்தல பகுதியில் வெளிநாட்டில் வேலை வாங்கித்தருவதாக கூறி பணமோசடியில் ஈடுபட்ட இந்தியப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைது நடவடிக்கை கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் முற்பகல் 9.45 மணியளவில் இடம் பெற்றுள்ளதுடன், 30 வயதுடைய இந்தியப் பிரஜையொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையில் பணமோசடியில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அத்துடன், சந்தேக நபர் கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினரால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவருக்கு பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன், அவருடைய வழக்கு விசா ணைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# "நாட்டைப் போலவே கைவிடப்பட்டுள்ளோம்" ஜனாதிபதி மைத்திரிக்கு சந்திரிகா கடிதம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்கள் சிலர் தன்னை சந்தித்து நாட்டைப் போலவே கட்சிக்குள்ளும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால் தாம் கைவிடப்பட்டுள்ள தாகத் தெரிவித்ததாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.



நாட்டின் பெரும்பான்மை மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள கட்சி மற்றும் குழுவினருடன் ஸ்ரீல.சு கட்சி இணைவதை தான் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்றும் அக்கடிதத்தில் சந்திரிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தன்னை வந்து சந்தித்த உறுப்பினர்களிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வேறெந்த கட்சியுடனும் இணையா மல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்ததாகத் அந்தக் கடிதத்தில் சந்திரிகா தெரிவித்துள்ளார். (இ-7)

# ரணில் அரசியலமைப்பைக்காட்டி தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்

## டிலான் பெரேரா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசியலமைப்பினைக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவோ தடையேற்படுத்தவில்லை.

நாட்டைப் பிளவுபடுத்த வேண்டாம்என்பதேஅவர்களின் கோரிக்கையாகவுள்ளது.

புதிய அரசியலமைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களை ஏமாற்றி வருவதாகவும் டிலான் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மாணவர்கள் பல்கலைகளுக்கு தேர்வாவதில் வீழ்ச்சி

## பேராசிரியர் கவலை

(காரைதீவு)

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்ற தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்வதாக கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். சுதர்சன் கவலை வெளியிட்டுள்ளார்.



பல்கலைக்கழக மாணவர்கள் சமூக சேவை ஒன்றியத்தின் தலைவர் என். நிராஜ் தலைமையில் வெள்ளி விழா காரைதீவு கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், "பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்ற தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கின்றது. எல்லோராலும் வைத்திய கலாநிதிகளாகவோ, பொறியியலாளர்களாகவோ வர முடியாது.

ஆகவே வர்த்தக, கலை துறைகளுக்கு தெரிவாகின்ற தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும். தமிழ் மாணவர்கள் அதிகளவில் கூடுதல் சிறப்பு புள்ளிகள் மற்றும் அடைவுகளைப் பெறவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அதேவேளை வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்கு தமிழ் மாணவர்கள் பொதுவாக விண்ணப்பிப்பதில்லை. இவற்றுக்கு விண்ணப்பிக்குமாறும் இவர்களை ஊக்குவிக்க வேண்டியுள்ளது.

வெகுவிரைவில் இந்திய புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. நான் ஒரு பகிரங்க கோரிக்கையை விடுக்கின்றேன். தரம் 05 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சை என்ற பெயரால் வதைக்காதீர்கள்.

அது பெற்றோர்களின் கௌரவத்தை நிலை நாட்டுகின்ற போட்டியாக மாறியுள்ளமை கவலை தருகின்றது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஊழல் மோசடிகளில் ஈடுபட மீண்டும் ஆட்சிக்கு வரமுயற்சி

## கபீர் ஹாசிம் சாடல்

(மாவனல்ல)

அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கான நோக்கம் கொண்ட சிலர் பொதுமக்களை ஏமாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என அமைச்சர் கபீர் ஹாசிம் குற்றம் சாட்டியுள்ளார்.


மாவனல்ல பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய் க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்களை ஏமாற்றி ஊழல் மோசடிகளில் ஈடுபட சிலர் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சிக்கின்றார்கள். இருப்பினும் மோசடி மற்றும் பல்வேறு குற்றம் சாட்டப்பட்டவர்களை நியமிக்க இந்த அரசாங்கம் ஒரு போதும் அனுமதிக்காது மேலும் மின்சார நாற்காலியில் அமர்வதற்காக கடந்த காலத்தில் ஒரு தனிநபர் அவருக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆனால் அது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து அந்த திட்டம் தோல்வியிலேயே முடிவடைந்தது என அவர் தெரிவித்தார்.

இருப்பினும் அதே நபர் இப்போது மோசடி செய்தவர்களுக்கும் ஊழல் செய்தவர்களுக்கும் ஆதரவாக மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார்.

இந்த விடயத்தில் பொது மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளதாக கபீர ஹாசிம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



வல்வெட்டித்துறையில் தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் பட்டத்திருவிழா இடம்பெற்றது.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

146

பத்து வருடங்களின் பின்னர் 1878 இல் அவர்களது நிலையங்களில் பதினான்கு மகளிர் பாடசாலைகளும் அவற்றில் 420 மாணவிகளும் இருந்தனர்.

ஏனைய மிஷன்களைப் போன்றே திருச்சபை மிஷனரிச் சங்கமும் தனது கல்வி, மத நடவடிக்கைகளை இரட்டிப்பாக்கியிருந்தது. அத்துடன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தீவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களுள் ஒன்றாக அபிவிருத்தி அடைந்ததுடன் இடைநிலைப் பாடசாலை மாணவிகளுக்கு ஆங்கிலமொழி மூலம் கல்வியை வழங்கியது.

திருச்சபை மிஷனரி சங்கத்தின் கல்வி நடவடிக்கைகள் சம்பந்தமான புள்ளிவிபரங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் வெஸ்லியன் மிஷனுடைய போக்கு எப்படி இருந்ததோ அதே போன்று இருந்தமையைக் காட்டுகின்றன.

1868 இல் திருச்சபை மிஷனரிச் சங்கம் 961 பாடசாலைகளைக் கொண்ட பத்தொன்பது ஆண்கள் பாடசாலைகளையும் 397 மாணவிகளைக்கொண்ட ஏழு மகளிர் பாடசாலைகளையும் தமது பொறுப்பில் வைத்திருந்தது.

1878 இல் முப்பத்தியெட்டு ஆண்கள் பாடசாலைகளும் பதினான்கு மகளிர் பாடசாலைகளும் முறையே 2152 ஆண் பிள்ளைகளையும் 420 மாணவிகளையும் கொண்டிருந்தது டன் 1897 இல் பாடசாலைகளின் மொத்தத்தொகை அறுபத்தியேழாகவும் மொத்த மாணவர் தொகை 3324 ஆகவும் இருந்தது.

ஆரம்பத்தில் அமெரிக்க சிலோன் மிஷன் மொத்தம் 633 மாணவரைக்கொண்ட பதினைந்து பாடசாலைகளை நிறுவியிருந்தது. இந்த மிஷனால் நடத்தப்பட்ட ஆரம்பப் பாடசாலைகள் 1821 இல் இருபத்து நான்காக இருந்து 1851 அளவில் எழுபத்து ஏழாகவும் மாணவர்களின் மொத்தத் தொகை 3548 ஆகவும் இருந்தன.

வெஸ்லியன் மிஷனையும் திருச்சபை மிஷனரிச் சங்கத்தையும் விட, யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் ஆரம்பப் பாடசாலைகளை நிறுவியதைப் பொறுத்தவரை இவர்கள் முன்னணியில் இருந்தனர். அத்துடன் அமெரிக்கன் சிலோன் மிஷன் இலவசக் கல்வியையும் அறிமுகப்படுத்தியது. எவ்விதக் கட்டணமும் அறவிடப்படாமலே அவர்களுடைய பாடசாலைகளில் கற்பித்தல் நிகழ்ந்தது.




“ ஆரம்பப் பாடசாலைகள் எழுத்தறிவு வீதத்தை அதிகரித்த போதும் மதமாற்றத்திற்காகப் பெரிதும் இயங்கவில்லை. ஒரு குறுகிய காலத்தினுள் இந்த உண்மையை அமெரிக்கன் சிலோன் மிஷன் தெளிவாக அறிந்து கொண்டது. எனவே தான் இது ஆரம்பத்தில் தெல்லிப்பழையிலும் வட்டுக் கோட்டையிலும் பின்னர் தமது ஏனைய நிலையங்களிலும் இரு பாலாருக்கும் விடுதிப் பாடசாலைகளை நிறுவியது ”

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

நாம் ஏற்கனவே பார்த்தது போன்று மக்கள் மத்தியில் ஆங்கிலக் கல்விக்கான பொதுவானதும் அதிகரித்ததுமான தேவை காணப்பட்டதும் மிஷன்களின் சுய தேவையும் இடைநிலை, உயர்நிலை கல்வித் துறைகளில் விரிவாக்கம் செய்வதற்கு அவர்களுக்குப் பிரதான உந்து சக்தியாக இருந்தன.

ஆரம்பப் பாடசாலைகள் எழுத்தறிவு வீதத்தை அதிகரித்த போதும் மதமாற்றத்திற்காகப் பெரிதும் இயங்கவில்லை. ஒரு குறுகிய காலத்தினுள் இந்த உண்மையை அமெரிக்கன் சிலோன் மிஷன் தெளிவாக அறிந்து கொண்டது. எனவே தான் இது ஆரம்பத்தில் தெல்லிப்பழையிலும் வட்டுக் கோட்டையிலும் பின்னர் தமது ஏனைய நிலையங்களிலும் இரு பாலாருக்கும் விடுதிப் பாடசாலைகளை நிறுவியது.

கிறிஸ்தவச் சூழலில் மிஷனரிமாரின் தொடர்ச்சியான நேரடிக் கவனத்திலும் வழி நடத்தலிலும் பிள்ளைகளை வைத்திருந்து கல்வி புகட்டுவதே இந்தப் பாடசாலைகளை அவர்கள் நிறுவியதன் நோக்கமாக இருந்தது. பிள்ளைகள் தமது பாரம்பரியச் சூழலில் இருந்தும் தமது பெற்றோரின் செல்வாக்கிலிருந்தும் விடுபட்டு கிறிஸ்தவப் போதனைக்குச் சாதகமாக இயங்கி கிறிஸ்தவமே வெளிப்படுத்தலை அருளக்கூடிய ஒரேயொரு உண்மையான சமயம் என்ற முடிவுக்கு வந்து அதை ஏற்றுக்கொள்வர் என நம்பப்பட்டது.

இந்த எதிர்பார்ப்புக்கள் மூலம் சில மாற்றங்கள் நிகழவே செய்தன. இந்த விடுதிப் பாடசாலையின் மாணவர்கள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கற்பிக்கப்பட்டதுடன் அவர்களது கற்கை நெறிகள் வேதப்பாடம், கணிதம், இலக்கணம், புவியியல் ஆகிய பாடங்களையும் உள்ளடக்கியிருந்தன.

இவற்றில் சிறந்து விளங்கியவர்கள் உயர்கல்வியை மேலே தொடர அனுமதிக்கப்பட்டனர். சமஸ்கிருதம், ஐரோப்பிய இலக்கியம் அல்லது விஞ்ஞானம் என்ற இத்துறைகளில் இவர்கள் பெறக்கூடிய தராதரங்கள் அவர்களுக்கு அரசாங்கத்தில் ஆசிரியர்களாக, மொழி விளக்கமளிப்பவராக, மொழி பெயர்ப்பாளராக அல்லது சுதேச மொழிப் பிரசங்கிகளாக வேலை செய்யத் தகுதியை அளித்தன.

அமெரிக்க சிலோன் மிஷனும் ஆங்கிலத்தில் இடைநிலைக் கல்வியை அளிப்பதில் முன்னின்றது. 1830 இல் முதலில் வருடாந்தம் கட்டணம் செலுத்தும் முறையிலமைந்த தனிக் கவனிப்புடனான கல்வி வசதியை அளித்தது.

இப்பாடசாலை கடுமையான ஒரு ஒழுங்கு விதிகளையும் கிறிஸ்தவமயப்படுத்துவதில் அதிக ஆர்வமும் கொண்டிருந்த போதும் இவர்கள் செய்த கல்விப் பங்களிப்பை மக்கள் அதிகமாகப் பாராட்டியதனாலும் ஆங்கிலக் கல்வியில் அதிக மதிப்பு வைத்திருந்ததனாலும் அவர்கள் பொருளாதார ரீதியிலும் மத ரீதியிலுங்கூட அதற்கான பங்களிப்பைச் செலுத்த ஆயத்தமாயிருந்தனர்.

அமெரிக்க சிலோன் மிஷனின் பிரதான நிலையங்கள் யாவற்றிலும் இலவச மகளிர் விடுதிப் பாடசாலைகள் நிறுவப்பட்டு பின்னர் இவை அவற்றின் வகையில் ஆசியாவில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் கல்வி நிலையங்களாக உயர்ச்சி பெற்றன. (தொடரும்)

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நான் தயார் - சமல் ராஜபக்ஷ அறிவிப்பு



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தானும் தயாராக இருப்பதாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ சகோதரர்களில், மூத்தவரான முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் பேசிய போதே, இவ்வாறு தெரிவித்தார்.

"மக்கள் தயார் என்றால், இனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதிப் பதவிக்கு நான் பொருத்தமானவர் எனின், நானும் போட்டியிடுவதற்குத் தயாராகவே இருக்கிறேன்" என்று சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்றும், அவர் யார் என்பதை இப்போது வெளியிட முடியாது எனவும், சில நாட்களுக்கு முன்பு, சமல் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இதற்குப் பின்னர், கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார் என்று அறிவித்துள்ளதையடுத்து, சமல் ராஜபக்ஷ, தானும் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சமல் ராஜபக்ஷவின் இந்தக் கருத்து, ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே ஜனாதிபதிப் பதவிக்கான போட்டி, தீவிரமடைந்துள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. (இ-7)

# அறநெறிக் கல்வியை மேம்படுத்த திட்டம்



(அம்பாந்தோட்டை)

அறநெறிக் கல்வியை வலுப்படுத்தும் வகையில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை சீதாராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின்போது உரையாற்றிய அமைச்சர் சஜித், கலாசார அமைச்சர் என்ற வகையில் தான் நடைமுறைப்படுத்தும் முதல் வேலைத் திட்டமாக இது அமையும் எனவும் தெரிவித்தார்.

சீதாராம விகாரையில் அமைக்கப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைக்கான கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அனைவருக்கும் நிவாரணம் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த கட்டடத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## நீரிழிவு நோயா? மற்றும் உடல் பருமனா?

இதோ நான்கு [4] வாரங்களில் நீங்கள் Super SLIM ஆக மாறுவதற்கான வாய்ப்பு

Teastar Healthy Tea Products மற்றும் வழங்கும் இலவச மாபெரும் மருத்துவ ஆலோசனைகள், பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை விளக்கங்கள்



கொழும்பில் இருந்து அனுபவமிக்க வைத்தியர்கள் கலந்து கொள்கின்றார்கள்

இடம் :- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (கூட்டுறவு கட்டிடம்)

காலம் :- 18-19 ஜனவரி 2019 (வெள்ளி மற்றும் சனி)

நேரம் :- காலை 9.00 முதல் மாலை 5.00 மணிவரை

உங்கள் முற்பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்

RISWAN / HARI

070 569 8218, 077 442 0983, 077 962 8999

100% NATURAL PRODUCT (7152) TEASTAR REFRESHING THE WORLD 100% NATURAL PRODUCT

(7163)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1617

### காஜல்

உயிரைப் பெற்றெடுக்கும் பலத்தையே பெண்களுக்கு கொடுத்த இறைவன் அழுகையை மட்டும் பலவீனமாகக் கொடுத்து அடிமையாக்கிவிட்டான்




### விசாகா

அன்பைக் கொட்டிக் கொடுப்பவர்களை விட பணத்தை அள்ளிக் கொடுப்பவர்களையே உலகம் அதிகம் விரும்புகிறது




### மீனா

கோவில் உண்டியலில் கோடி கோடியாய் கொட்டுவதைவிட அநாதைக் குழந்தைகளுக்கு ஒருவேளை வயிறார உணவளியுங்கள்



### விதுசன்

பிறர் சொல் கேட்டு வாழாதே, உன்னால் என்ன செய்ய முடியும் என்பது உனக்கு மட்டுமே தெரியும்



### கபிலன்

மரியாதையும் பால் மாதிரித்தான் ஒருமுறை கெட்டால் கெட்டதுதான்



### ராகுலன்

பிறருக்கு கொடுப்பதற்கு எதுவும் இல்லையெனில் கனிவான வார்த்தைகளையாவது பேசுங்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இந்தியாவிடமிருந்து 1000 மில்லியன் டொலர் நிதியைப் பெறும் முயற்சியில் இலங்கை அரசு

## நிதி இராஜாங்க அமைச்சர் எரான் தகவல்

(கொழும்பு)

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அரசாங்கம், இந்தியாவின் மத்திய வங்கியிடமிருந்து ஒரு பில்லியன் டொலரை நாணயப் பரிமாற்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்கள் மற்றும் கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட ஆட்சிக் குழப்பங்களால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களைச் சமாளிக்க இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிடம் உதவி கோரியுள்ளது.

இந்தியாவின் மத்திய வங்கியான ரிசர்வ் வங்கியிடமிருந்து நாணயப் பரிமாற்றங்களின் மூலம் 400 மில்லியன் டொலரை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தியிருந்தது.

இந்தியாவின் ரிசர்வ் வங்கியும் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது.

இந் நிலையில், இந்தியாவின் ரிசர்வ் வங்கியிடமிருந்து 1000 மில்லியன் டொலரை நாணயப் பரிமாற்றங்களின் மூலம் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுக்களில் இலங்கை அரசாங்கம்



ஈடுபட்டுள்ளதாக எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# தாயகம் திரும்ப முற்பட்ட தமிழர்கள் இருவர் இந்தியக் கடலோரக் காவற்படையால் கைது

(சென்னை)

தமிழகத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்ப முயற்சித்த இரண்டு பேரை இந்தியக் கடலோரக் காவற்படையினர் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இந்தியக் கடலோரக் காவற்படையினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்கள் இராமேஸ்வரம் மண்டபத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குப் படகில் வந்து கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடலோரக் காவற்படையினர் மன்னார் வளைகுடா கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையிலேயே சந்தேகத்திற்கு இடமான வகையில்கண்ணாடிஇழைப் படகில் இருவர் பயணிப்பதை அவதானித்து இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சகோதரர்களான சிவராஜா மற்றும் அன்பு குமரன் எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த இருவரும் இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகக் கடந்த 1990 ஆம் ஆண்டு படகு மூலம் அகதிகளாக தமிழகத்திற்குச் சென்றதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இவர்கள் மதுரை ஆனையூர் முகாமில் தங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது. மேலதிக விசாரணைகளை இந்தியக் கடலோரக் காவற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-285)

# நிதியமைச்சின் செயலாளர் பதவியை ஏற்கத்தயார்

## வர்த்தகர் தம்மிக பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் முன்னணி வர்த்தகர்களிடம் நாட்டுக்கு சேவையைப் பெற்றுக் கொண்டதாகவும் தற்போதைய தலைவர்களும் நாட்டின் எதிர்காலப் பயணத்திற்காக முன்னணி வர்த்தகர்களிடம் ஒத்துழைப்புப் பெற வேண்டும் என்று பிரபல வர்த்தகர் தம்மிக பெரேரா தெரிவித்துள்ளார்.

தேவையென்றால் நிதியமைச்சின் செயலாளர் பதவியை ஏற்றுக்கொள்ளத் தான் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாணம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

"மக்களுக்கு விளங்குகின்ற பொலிஸ் அதிகாரம் என்ன? தமது முறைப்பாடொன்றைப் பதிவு செய்யச் சென்றால் தமது மொழியில் உடனடியாகச் செய்துகொள்ள முடியுமா என்பதே.

வடக்கு மாகாணம் முழுவதற்கும் 56 பொலிஸ் நிலையங்களே இருக்கின்றன. ஆகவே ஒரு பொலிஸ் நிலையத்திற்கு 10 அதிகாரிகள் என்ற ரீதியில் 560 பேரை நியமித்தால், அந்த ஒவ்வொரு நிலையங்களுக்கும் 5 மோட்டார் சைக்கிள்களை வழங்கினால், 280 மோட்டார் சைக்கிள்கள், மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கின்றன.

ஆகவே இதுபோன்று மோட்டார் சைக்கிள்களை வழங்கிப் பொலிஸ் அதிகாரிகள் சிலரை நியமித்து ஏன் மக்கள் பொலிஸ் நிலையத்திற்கு வரும் வரையில் இருக்க வேண்டும்? மக்கள் தொலைபேசியில் அழைத்தால் ஏன் வீட்டிற்குச் சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்ய முடியாது?

வடக்கில் இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் பாடசாலை செல்கிறார்கள். இந்த மாணவர்களில் 30, 40 வீதமானவர்கள் காலையில் சாப்பிடாமல் செல்கிறார்கள்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் மே இறுதியில்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைவாகப் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் விபரம் மே மாத இறுதியில் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் மீள் பரிசீலனை கல்வியமைச்சால் வெளியிடப்பட்ட பின்னர் வெட்டுப்புள்ளிகளை வெளியிடும் நடவடிக்கையை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் சில்வா தெரிவித்தார்.

மீள் பரிசீலனைப் பெறுபேறு மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் தயாரிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 350 | 180 | 300 | 400 |
| தக்காளி | 100 | 100 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 40 | 60 |
| கோவா | 100 | 100 | 70 | 120 |
| கரட் | 80 | 160 | 100 | 160 |
| பூசணி | 50 | 50 | 40 | 60 |
| புடோல் | 80 | 100 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 150 | 250 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 160 | 250 | 150 | 160 |
| லீக்ஸ் | 160 | 180 | 110 | 160 |
| பீற்றூட் | 140 | 100 | 40 | 160 |
| கறிமிளகாய் | 250 | 250 | 170 | 200 |
| முருங்கைக்காய் | 800 | — | — | 600 |
| போஞ்சி | 80 | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 130 | 200 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 35 | 40 |
| தேசிக்காய் | 150 | 160 | 130 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 180 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 350 | 170 | 200 |
| முள்ளங்கி | 40 | 100 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 26 |
| ஈரப்பலா | — | 80 | 120 | 60 |

# செய்தித்துளிகள்

## உலக முடிவைக் காண புதிய நடைமுறை அறிமுகம்

லிட்டில் லண்டன் என வர்ணிக்கப்படும் நுவரெலியாவில் உலக முடிவைக் காணப் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

ஹோர்டன்பிளேஸில் அமைந்துள்ள உலக முடிவைப் பார்க்கச் செல்லும் பல சுற்றுலாப் பயணிகள் பரிதாபமாக உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் உயிரிழப்புக்களை நிறுத்தும் நோக்கில் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலக முடிவின் கீழ் பகுதியைப் பார்ப்பதற்குக் கண்ணாடி ஒன்று பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஆய்வு நடவடிக்கைகள் மொறட்டுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் உட்பட நிபுணர்கள் குழுவினரால் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் உலக முடிவைக் காணச் சென்ற ஜேர்மன் நாட்டுப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணத்தையடுத்து இலங்கை அரசாங்கம் உட்பட உரிய பிரிவுகள் அதிக அவதானத்தை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மின்சாரம் தாக்கி யானை பலி



(சிகிரியா)

சிகிரியா-மஹசேன்கம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி 40 வயதுடைய காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

விவசாயத்திற்கு ஏற்படும் சேதத்தைத் தடுப்பதற்கு பொருத்தப்பட்ட மின்சாரம் தாக்கியே குறித்த யானை உயிரிழந்துள்ளது.

இந்நிலையில் தோட்ட உரிமையாளரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஹிங்குரன்கொட நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளார். (இ-7)

## பொலிஸ் நிலையத்தில் பொங்கல்



(கரணவாய்)

தைப்பொங்கல் தினத்தன்று நெல்லியடி பொலிஸ்நிலையத்தில் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. (இ-60)

## ஜப்பான் போர்க்கப்பலுக்கு இலங். கடற்படை வரவேற்பு




(அம்பாந்தோட்டை)

ஜப்பானியக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று நல்லெண்ணப் பயணமாக நேற்று முன்தினம் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இகாசுசி என்ற இந்தப் போர்க்கப்பலை இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்றனர்.

ஜப்பானியப் போர்க்கப்பல் மூன்று நாட்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்றும், இதன் போது இரு நாடுகளின் கடற்படையினரும் கூட்டாக பல நிகழ்வுகளில் பங்கேற்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)




# பிறவிப்பகை நட்பாக முடியாது

ஒரு ஊருக்கு வெளியே அரசமரம் ஒன்று இருந்தது. அதை இருப்பிடமாகக் கொண்டு கீரிப்பிள்ளை, எலி, பூனை, ஆந்தை ஆகிய நான்கும் வசித்து வந்தன. கீரியும் எலியும் மரத்தின் வேரின் கீழ் உள்ள வளைக்குள் தனித் தனியாக வசித்தன.

பூனை, மரத்தின் அடியில் உள்ள பெரிய பொந்தில் வசித்தது. ஆந்தை, மரத்தின் உச்சியில் இருந்த ஒரு பொந்தில் வசித்தது. எலியின் நிலைமை தான் பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது. ஆந்தை, பூனை, கீரி இவற்றின் கண்களில் படாமல், எலி தினமும் இரை தேட வேண்டியதாயிருந்தது.

ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது. அதனால், இரவில் தான் இரை தேடுவது வழக்கம். பூனையோ, பகலிலும் இரவிலும் அருகில் இருந்த வயலுக்குச் சென்று பயமின்றி இரை தேடித் தின்று வந்தது.

பூனையைப் பிடிப்பதற்காக வேடன் ஒருவன் வயலுக்குப் போகும் வழியில் கண்ணி வைத்து விட்டுப் போனான். வழக்கம் போல் எலிகளைப் பிடிக்கச் சென்ற பூனை, வேடன் போட்டிருந்த கண்ணியில் சிக்கிக் கொண்டது. தப்பிக்க வழி இல்லை.

சிறிது நேரத்தில் பதுங்கிப் பதுங்கி திருட்டுத் தனமாக இரை தேடி வந்த எலி, கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த பூனை



யைக் கண்டு துள்ளிக் குதித்தது. அப்போது ஆந்தையும் கீரியும் சேர்ந்து சென்றபோது பூனை கண்ணியில் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தன. "இனி பூனையைப் பற்றிய பயம், இல்லை. எலியைப் பிடித்து விடலாம்'' என்று எண்ணின.

தன்னைக் குறி வைத்து ஆந்தையும் கீரியும் வருவதைக் கண்டு எலி நடுங்கியது. கீரிக்கும் ஆந்தைக்கும் பயந்து எலி வழியை மாற்றிக்கொண்டு பூனையின் பக்கம் சென்றது. பூனையின் கால்கள் கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த போதிலும் ஒரே அறையில் கொன்று விடுமே என்று கலக்கமுற்று கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

பூனையின் அருகில் சென்று, "நீ என் எதிரியாக இருந்தாலும் கூட, இப்போது நீ சிக்கிப் பரிதவிப்பதைக் காணும்போது எனக்கு இரக்கம் மேலிடுகிறது. என் பற்களால் இந்தக் கண்ணியை கடித்து உன்னை விடுவித்து விடுகிறேன். ஆனால், நீ விடுபட்டதும் உன்னால் எனக்கு ஆபத்து நேரிடுமோ என்று தான் பயமாக இருக்கிறது" என்றது எலி.

"எலியே! நாம் எதிரிகளான போதிலும் இப்போது என்னை நீ விடுவித்து விட்டால், உனக்கு நண்பனாக இருப்பேன். ஆபத்தான வேளையில் என் உயிரைக் காப்பாற்றிய உன்னை ஒருபோதும் ஒன்றும் செய்ய மாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன்" என்று கெஞ்சியது பூனை.

உடனே எலி, பூனையை நெருங்கியது. அதைக் கண்ட கீரியும் ஆந்தையும் எலியைப் பிடிக்க வழியில்லாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்று விட்டன.

எலியிடம், "சீக்கிரம் பற்களால் கண்ணியை அறுத்துவிடு, விடியப் போகிறது வேடன் வந்து விடுவானே!" என்று அவசரப்படுத்தியது பூனை.

கண்ணிகளை கத்தரிப்பது போல், பற்களை வைத்து பாசாங்கு செய்து, வேடனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தது எலி.

கண்ணியிலிருந்து சீக்கிரமே விடுபட்டு விடுவோம் என்ற நம்பிக்கையோடு இருந்தது பூனை.

பொழுது விடிந்தது. வேடனும் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட எலி, கண்ணியின் சுருக்கை இறுகச் செய்துவிட்டு, வேடனுக்கு அஞ்சி ஓடத் தொடங்கியது.

எலியிடம், "இது நியாயமா? உதவி புரிவதாகக் கூறி, நம்பிக்கை மோசம் செய்து விட்டாயே?" என்று பரிதாபமாகக்கேட்டது பூனை.

"விரோதிகள் கூட, சந்தர்ப்பம் காரணமாக நண்பர்களாக ஆவார்கள்.

ஆனால், அத்தகைய நட்பு, உண்மையான நட்பாகவும் வெகு காலத்துக்கு நீடிக்கக் கூடியதாகவும் இருக்காது!" என்று கூறி, ஒரே ஓட்டமாக ஓடியது எலி.

பிறவியிலேயே பகைவர்களாக இருப்பவர்கள் நட்புக்கொள்ள முடியாது.

# பூகம்பம் வருவதை விலங்குகள் அறியுமா?

பூகம்பம் வந்து உலுக்கிய பிறகு 'அது எவ்வளவு தீவிரமானது' என்பதை ரிக்டர் அளவில் அளக்கலாம். மனித முயற்சி இதை மட்டுமே சாத்தியமாக்கி இருக்கிறது. 'இந்த நேரத்தில், இந்த இடத்தில், இப்படி ஒரு பூகம்பம் வரலாம்' எனக் கணித்துச் சொல்லும் தொழில்நுட்பம் இன்னமும் கைகூடவில்லை.

ஆனால், 'பூகம்பம் வருவதை விலங்குகளும் பறவைகளும் முன்கூட் டியே உணர்ந்து கொள்கின்றன' என்று உலகம் முழுவதும் நம்பிக்கை இருக்கிறது.

உண்மையில் விலங்குகள் பூகம்பத்தை உணர்ந்து கொள்ளுமா? என்றால் அதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. விஞ்ஞானம் அதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஆனால், சீனா, ஜப்பான், இந்தோனேஷியா போன்ற நில நடுக்கம் உள்ள அதிகம் நிகழக் கூடிய நாடுகள், 'விலங்குகளுக்கு இந்த ஆற்றல் உண்டு' என்று வாதிடுகின்றன.

இயற்கையோடு மனிதன் ஒன்றி வாழ்ந்திருந்தால், மனிதனும் பூகம்பம் வருவதை முன் கூட்டியே அறிய முடியும் என்கிறார்கள்.

விலங்குகள் உண்பது, உறங்குவது எல்லாமே பொதுவாக தரையில்தான். தரை மீதுதான் பெரும்பாலான நேரங்களில் காதை வைத்துத் தூங்கும். தரைக்கும் விலங்குகளுக்கும் தொடர்பு உண்டு. அதனாலேயே தரையில் ஏற்படும் மெல்லிய அதிர்வுகளைக் கூட அவற்றால் உணர்ந்துதான் கொள்ள முடிகிறது.

ரயில் தண்டவாளத்தில் காதை வைத்தால் தூரத்தில் வரும் ரயிலின் சத்தம் கேட்பதைப் போல, தரையின் மீதே காதை வைத்திருப்பதால் தூரத்தில் ஏற்படும் நில நடுக்கத்தின் சத்தத்தைக் கேட்க முடிகிறது என்கிறார்கள். விலங்குகளைப் போலவே கற்கால மனிதனும் பூகம்பம் வருவதை முன் கூட்டியே அறிந்து கொண்டான். அதற்கேற்ப இடத்தை மாற்றினான்.




"நவீன கால மனிதர்கள் வாகனங்களுக்குப் பழகியதால், அதிர்வுகளைத் தாங்கித் தாங்கி உடல் பழக்கப் பட்டுவிட்டது. இதனால் பூகம்பத்தின் மெல்லிய அதிர்வுகளை உணர முடிவதில்லை. இயற்கையை விட்டு செயற்கைக்கு மாறியதால்தான் இதெல்லாம் தெரிவதில்லை" என்கின்றனர் ஜப்பானியர்கள்.

நில் நடுக்கத்திற்கு முன்பு நிலத்தின் மீது கந்தக வாசனை வீசும் என்றும் இதனை விலங்குகள் முன்கூட்டியே புரிந்து கொள்ளும் என்றும் பூகம்பத்திற்கு முன்பு கடல் நீர் கலங்கி, இயற்கையான கடல் நிறத்தில் இருந்து வேறுபட்டுத் தெரியும் என்றும் நம்பிக்கை நிலவுகிறது. பறவைகள் இதை உணர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று விடுகிறது.

இதையெல்லாம் விஞ்ஞானம் இன்னும் உறுதிப் படுத்தாததால் உண்மை எதுவென்று நம்ப முடியாத நிலையாக உள்ளது என்பதே உண்மை.

## அறிவியல் தகவல்கள்

- எதிர்ப்பக்கங்கள் இணையாக உள்ள நாற்கரம் - சாய்சதுரம்
- வடிவியலின் அடிப்படைக் கருத்து - புள்ளி
- சூத்திரங்களைப் பயன்படுத்தி பரப்பளவு காண இயலாதவை - கூம்பு
- ஒரு தளத்தில் அமைக்க இயலாத வடிவியல் உருவங்கள் - ஐங்கோணம்
- முக்கோணத்தின் வகைகள்-6
- பல கோணத்தின் அனைத்துப் பக்கங்களின் நீளங்களும் சமமாக இருப்பின் வில் என்கிறோம்.
- நீளம், அகலம், உயரம் போன்றவை இல்லாத ஒன்று கணிதத்தில் வட்டம் ஆகும்.
- வடிவியலின் தந்தை- ரிணட் பாப்பிதரஸ்
- 1000 கி.கி என்பது - 1 தொன்
- 0.50 என்பது ஒரு தகு பின்னம் பின்னம்.

மனச்சாட்சியைக் கொல்லக்கூடாது.
அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்.
- சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு ஆளுநர் உரைத்த யதார்த்தமான கருத்து

முல்லைத்தீவு நாயாறு பகுதியில் உள்ள நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 14ஆம் திகதி ஏற்பாடாகியிருந்த பொங்கல் விழாவைத் தடுத்து நிறுத்த பௌத்த பிக்குகள் முற்பட்ட சம்பவம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்துக்களின் ஆலயமாக இருக்கக்கூடிய பிள்ளையார் கோவிலில் பொங்கல் செய்வதைத் தடுக்கின்ற அளவில் பௌத்த பிக்குகள் இருப்பதானது, இந்த நாட்டில் எந்தக் காலத்திலும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற நிலைமையையே காட்டி நிற்கின்றது.

இதனாலோ என்னவோ அரசியல் நோக்கிலான பௌத்த மயமாக்கல் தமிழர் பகுதிகளில் நிறுத்தப்பட வேண்டுமென வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்து மிகவும் முக்கியமானது என்பதுடன் யதார்த்த சூழ்நிலையை எடுத்துரைப்பதாகவும் உள்ளது.

போருக்குப் பின்பான தமிழர் தாயகம் என்பது பல கோணங்களில் கூறுபடுத்தப்படுகிறது.

ஒருபுறத்தில் சட்டவிரோதமாக சிங்களக் குடியேற்றம். மறுபுறத்தில் படையினரின் நில ஆக்கிரமிப்பு. கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்களைக் கபளீகரம் செய்வதும் கொள்வனவு செய்வதனூடாக தமிழர்களை ஓரங்கட்ட நினைக்கின்ற இன்னொரு இனத்தின் திட்டமிடல் எனப் பல்வேறு பிரச்சினைகளைத் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில் முல்லைத்தீவு நாயாறு பகுதியில் உள்ள நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் ஏற்பாடாகியிருந்த பொங்கல் திருவிழாவை தடை செய்வதற்கு பௌத்த பிக்குகள் சிலர் முற்பட்டனர் எனும்போது,

பௌத்த பிக்குகளின் நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தவிர, இலங்கையில் பௌத்தத்துக்கே முன்னுரிமை எனும்போது நிலைமை இன்னும் மோசமாகும் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

பௌத்தத்துக்கு முன்னுரிமை என்ற அரசியலமைப்பு சாசனம் ஏனைய மதங்களைப் புறந்தள்ளுகிறது என்பதையும் இந்து - கத்தோலிக்க - இஸ்லாமிய மதங்கள் சார்பான வரலாற்றுப் பெருமைமிக்க வழிபாட்டிடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு.

எனவேதான் அரசியல் நோக்கில் வடபகுதியில் விகாரைகளை அமைப்பது ஏற்புடையதல்ல என்று வடக்கின் ஆளுநர் தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

இங்கு பௌத்த விகாரைகள் என்பது பற்றி பிரஸ்தாபித்த வடக்கின் ஆளுநர்; இன்னுமோர் விடயம் பற்றியும் சிந்திப்பது வடக்கின் மதசார்பற்ற போக்கை உறுதி செய்வதற்கு உதவுவதாக இருக்கும்.

அதாவது யுத்தத்துக்குப் பின்பாக, சமயம் பரப்பும் நோக்கில் சந்திகளிலும் வீதி ஓரங்களிலும் சொருபங்களை அமைக்கின்ற நடவடிக்கைகள் தீவிரமாக நடக்கின்றன.

வட பகுதி முழுவதையும் தமது சமயத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான மதவெறித்தனம் சில சமய அமைப்புக்களிடம் தலைவிரித்தாடுகிறது.

இத்தகைய செயல்களைத் தடுக்க மிக இறுக்கமான நியமங்களைக் கொண்டுவர வேண்டும்.

**இந்த நியமங்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொருந்துமாறு உரிய நடவடிக்கைகளை வடக்கின் ஆளுநர் எடுப்பாராக இருந்தால், அது எதிர்காலத்தில் எம்மண்ணில் மதச் சண்டைகள் ஏற்படாமல் இருப்பதற்குப் பேருதவியாக அமையும் என்பது நம் தாழ்மையான கருத்து.**

## அறிவாற்றல் இல்லாத அரசியல்வாதிகளை நிராகரிக்க வேண்டும்

### முன்னாள் முதல்வர் நஸீர் காட்டம்

(ஏறாவூர்)

அபிவிருத்திக்கென வரும் வருடாந்த நிதிகளை பயன்படுத்தாமல் திறைசேரிக்குத் திரும்ப வைக்கும் அரசியல்வாதிகளை மக்கள் நிராகரிப்பதோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் மக்கள் கேள்விக்குட்படுத்த வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர அஹமட் தெரிவித்தார்.

வருடாந்தம் பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் பல மில்லியன் ரூபாய்கள் பயன்படுத்தப்படாமல் திறைசேரிக்குத் திரும்புவதற்கு வழிவகுப்பது பிரதேச மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்றும் தெரிவித்தார்.

இது விடயமாக நேற்றுப் புதன்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர்,

சாணக்கியமும் வினைத்திறனும் அற்ற பல அரசியல்வாதிகளால் மக்களுக்கு கேடுதான் விளைகிறது. இதனை மக்கள் அறிந்து கொள்வதில்லை. அரசியல்வாதிகள் சமகால நாட்டு நடப்புக்கள், உலக அரசியல் ஒழுங்குகள். நாட்டின் நிர்வாக முறைமைகள், சட்டம் ஒழுங்கு, பன்மொழி ஆற்றல் உட்பட துறைசார்ந்த அறிவாற்றல்களையும் செயற்றிறனையும் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் நமது நாட்டில் அவ்வாறான அரசியல்வாதிகளைக் காண்பது அரிதானது. அதனால்தான் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்துவதிலும் நாட்டை அபிவிருத்தி செய்வதிலும் பின்னடைவுகள் ஏற்படுகின்றன.

உண்மையாக மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெறக் கூடிய நிர்வாக பொறிமுறைகளை நாடிச் செல்லாது மக்களோடு தெருவுககு வந்து ஆர்ப்பாட்டத்தில கூச்சல் போடுபவர்களாகவே பல அரசியல்வாதிகள் தங்களை குறைமதியாளர்களாக இனங்காட்டிக் கொள்கின்றார்கள்.

இத்தகைய அரசியல்வாதிகள் எந்தவொரு முரண்பாட்டையும் நுட்பமாக அணுகித் தீர்வு காணத் தகுதியற்றவர்கள் என்பது வெளிப்படை. மேலும் இத்தகைய குறைமதி அரசியல்வாதிகளே குழப்பங்களுக்கும் காரணமாக இருந்து கொணடிருக்கின்றார்கள்.

இத்தகைய அரசியல்வாதிகளை இனிவரும் காலங்களில் நாகரிகமுள்ள அனைத்து சமூகங்களும் நிராகரிக்க வேண்டும்.

பிரதேச அரசியல்வாதிகள் தமது பிரதேச மக்களின் பிரச்சினைகள், தேவை கள், தீர்வுகள், முன்னுரிமைகள் என்பனவற்றைக் கருத்திற்கொ ண்டு அபிவிருத்திக்கான திட்டங்களை வரைந்து முன்மொழிவுகளைச் செய்யாததால் அபிவிருத்திகள் இடம்பெறமுடியாதுள்ளன. அதே வேளை, சில அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் அக்கறையற்ற போக்கினால் பிரதேச அபிவிருத்திக்கென வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதிகள் பல மில்லியன்களாக மீண்டும் திறைசேரியைச் சென்றடையும் துர்ப்பாக்கிய நிலையுள்ளது. குறிப்பாக சிறுபான்மை இன அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் அறிவற்றவர்களாக இருந்து விடுகின்றார்கள். இந்தப் போக்கை இனி வரும் காலங்களில் மாற்றியமைக்க வேண்டும். சாணக்கியமற்ற அரசியல்வாதிகளை நிராகரித்து மக்கள் அறிவாற்றலுள்ள அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7

## மனதுக்குச் சொல்லி...

- நம்மை ஜெயிக்க யார்? இருக்கிறார்கள் என்கிற ஆணவத்தைத் தவிர்க்க வேண்டும்.
- நம்மைப் பிறர் தாழ்வாக நினைப்பார்களோ? என்கிற தாழ்வு மனப்பான்மையை அகற்றிவிட வேண்டும்.
- அடுத்தவர்களுக்கு கெடுதல் நினைக்கும் எண்ணத்தை வேராடு அழித்துவிட வேண்டும்.
- போராடி வெல்லும் சக்தியை உள்ளுக்குள் விதையாய் விதைக்க வேண்டும். தீங்கு விளைவிக்கும் எண்ணத்தை அடியோடு கிள்ளி எறிந்து விட்டு நம்பிக்கையான எண்ணங்களைப் பதிக்க வேண்டும்.
- நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொண்டால் நம்முடைய வாழ்க்கை நல்ல பாதையில் பயணமாகும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமை ப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் பிரதேசம், செம்மண் தீவு, செம்மண் தீவு Ware House, அச்சங்குளம், எருவிட்டான், அறுகுகுன்று, அளவக்கை, மாவிலங்கேணி, வாழ்க்கை பட்டான் கண்டல், பல்லங்கோட்டை, பண்டாரிகுளம், உமணகிரி, நறுவிலிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

## மனைவியின் இறப்பில் சந்தேகம் கணவன் பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

மனைவியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கணவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இமையாளன் கிழக்கு உடுப்பிட்டி பகுதியைச் சேர்நத சிறிஸ்கந்தராசா வசந்தமாலா (வயது-60) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில நேற்று முன்தினம் செவவாய்க்கிழமை மரணமடைந்தார்.

அவரின் இறப்பு இயற்கை இறப்பு என தெரிவித்து வைத்தியசாலையில் இருந்து சடலம் வீட்டிற்கு எடுத்து வரப்பட்டது.

ஆனால் மனைவியின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக கணவரினால் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனை அடுத்து மேலதிக விசாரணையினை மேற்கொண்ட பருத்தித் துறை மரணவிசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா சடலத்தை பிரேதபரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல் வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-60)

## படுகொலைச் சதித்திட்டம் நாமலுக்கு சிஐடி அழைப்பு

அரசியல் பிரமுகர்கள் கொலை அச்சுறுத்தல் தொடர்பிலான வாக்குமூலத்தை வழங்க முன்னாள் ஜனாதிபதியின் மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுக்கு குற்றப்புலனாய்வு பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் சசி வீரவன்ச ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாமல்குமாரவால் வெளிபடுத்தப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்வதற்கான சதித்திட்டம் தொடர்பிலேயே இவர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (ம-3)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கன்பொல்லை மக்கள் ஒன்றியத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் வை.ஸ்ரீபன் திலக் தலைவராகவும் அ.சறோஜினி செயலாளராகவும் ந.நகுலேஸ்வரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின்நன்மை கருதி ஆதனவரி அறிவித்தல் - 2019 இற்கான படிவங்களை (K Form) விநியோகித்தல் பொருட்டு நாளை 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை கால 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வட்டாரம் 20, 21 இற்கான நடமாடும் சேவை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

தமது ஆதன விபரங்களை தெரிவித்து இதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## சத்திய தரிசனம்

### எளியவர்களுக்கு உதவுதல்



❖ யார் ஒருவன் உண்மையாக நடக்கிறானோ, அவன் தினமும் தவறாமல் கடவுளைப் பிரார்த்திக்கிறான் எனப்பொருள்.

❖ பிரார்த்தனை செய்யும் முன் கடவுளின் குணாதிசயங்கள், சக்தி, அருளின் மேன்மை ஆகியவற்றை உணர்ந்தால் தான் அவரது அருளாசியைப் பெற முடியும்.

❖ பஞ்சபூதத்தால் ஆன இயற்கை, இறைவனின் சொரூபமாக விளங்குகிறது. இயற்கையைப் பாதுகாத்தால் இறைவனை வழிபட்டவர் ஆவோம்.

❖ நல்ல விடயங்கள் நல்லோர் சொல்லிக் கேட்பது நம்மை உயர்வடையச் செய்யும். எப்போதும் இனிமையாக, நல்ல விடயங்களையே பேசுவது நம்மை முன்னேறச் செய்யும்.

❖ ஒருவரை ஒருவர் வெறுப்பதை நிறுத்துங்கள். எல்லாரிடமும் அன்புகாட்டி பழகுங்கள்.

❖ கடவுளின் நாமத்தை சொன்னால் மட்டும் போதாது. மக்களிடம் கலந்து பழகி அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கு கொள்ள வேண்டும். எளியவர்களுக்கு உதவ வேண்டும்.

# வட மாகாண துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணத்தை

## சுவீகரித்தது யாழ்.மாவட்ட அணி






இலங்கை துடுப்பாட்ட சங்கத்தால் வடமாகாண மாவட்டங்களுக்கிடையே நடத்தப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட 23 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான கடினபந்து சுற்றுபோட்டியின் இறுதி போட்டி கடந்த 13ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் வவுனியா மாவட்ட கடின பந்து துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன் தலைமையில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மாவட்ட அணி களத்தடுப்பை தெரிவு செய்து வவுனியா மாவட்ட அணியினை துடுப்பெடுத்தாட பணித்தது. அதன்படி களமிறங்கிய வவுனியா மாவட்ட அணி 27.5 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 94 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக சயரூபன் 29 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் யாழ் அணி சார்பாக விதுசன் 3 இலக்குகளையும், நிதுசன் 3 இலக்குகளையும் பெற்று கொடுத்தனர்.

95 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்குடன் களமிறங்கிய யாழ். மாவட்ட அணியினர் 15.4 பந்து பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை மாத்திரம் இழந்து 95 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் யாழ் அணி சார்பாக பானுசன் 31 ஓட்டங்களை பெற்று கொடுத்திருந்தார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ் அணியின் விதுசன் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்.அணியின் பானுசனும், சிறந்த பந்து வீச்சாளராக யாழ் அணியினை சேர்ந்த நிதுசனும் தெரிவுசெய்யபட்டிருந்தனர். வெற்றி பெற்றவர்களிற்கான கிண்ணங்கள் விருந்தினர்களால் வழங்கிவைக்கபட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தலைவர் மணிவாணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், வடமாகாண துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (க)

# இளையோருக்கான ரப்பிட் பிளிற்ஸ் சதுரங்கப் போட்டிகள்

இளையோருக்கான ரப்பிட், பிளிற்ஸ் சதுரங்கப் போட்டிகள் 8,10,12,14,16,18 வயதுப்பிரிவுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே நடைபெறவுள்ளது.

01.01.2019 குறித்த போட்டியாளர்கள் பூர்த்தி செய்துள்ள வயதே வயதெல்லையாகக் கொள்ளப்படும். பதிவுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 6 மணிவரை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

ரப்பிட் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.15 மணிக்கும் பிளிற்ஸ் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணிக்கும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

சர்வதேச தரப்படுத்தல் பட்டியலில் இடம்பெறும் தரப்படுத்தல் புள்ளி பெறுவோர் இப்போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது என ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

# தெல்லியூர் ரைரன்ஸ் - வேலணை வேங்கைகள் அணிகள் வெற்றி

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், தொழில்முறை கிரிக்கெட் சுற்றுப்போட்டியான, யாழ்ப்பாணம் சுப்பர் லீக் இருபது-20 சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் என 8 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில், பி பிரிவு அணிகளுக்கிடையிலான முதற்சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**தெல்லியூர் ரைரன்ஸ் - வேலணை வேங்கைகள் அணிகள் வெற்றி**

தெல்லியூர் ரைரன்ஸ் அணியை எதிர்த்து பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற தெல்லியூர் ரைரன்ஸ் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கிணங்க களமிறங்கிய ரில்கோ அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் அனோராஜ் 29, கௌதமன் 21, தர்சிகன் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் தெல்லியூர் அணி சார்பாக சுஜந்தன் 3 விக்கெட்களையும், கபில் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

134 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய தெல்லியூர் ரைரன்ஸ் அணி, 19.5 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அஜித் 27 ஓட்டங்களையும், கஜீபராஜ், கபில் முறையே ஆட்டமிழக்காமல் முறையே 23, 20 ஓட்டங்களையும், சரண் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ரில்கோ அணி சார்பாக, அனோஜராஜ் மற்றும் மதன் ஆகியோர் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

**வேலணை வேங்கைகள் வெற்றி**

வேலணை வேங்கைகள் அணியை எதிர்த்து கொக்குவில் ஸ்ரார்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வேலணை வேங்கைகள் அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர்.



அதற்கிணங்க களமிறகிய கொக்குவில் ஸ்ரார்ஸ் 19.3 ஓவர்களில் 147 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஜனுதாஸ் 40, விேனாத் 30, ஏ.ஜான்சன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

வேலணை வேங்கைகளின் பந்துவீச்சில், கோகுலன் 3 விக்கெட்களையும், விதுர்சன் மற்றும் சத்தியன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

148 ஓட்டங்களை பெற்றால்வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வேலணை வேங்கைகள் அணி, 17.3 ஓவர்களில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் சத்தியன் 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அணித்தலைவர் மணிவண்ணன் 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். சுபேந்திரன் 3 விக்கெட்களைக் கைப்பற்றினர். (க-26)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சென்.பற்றிக்ஸ் அணிகள் இறுதியில்





யாழ்.மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

19 வயதுப்பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் இந்தச் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

இதன் அரையிறுதியாட்டங்கள் கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி மோதியது.

இந்தப் போட்டியில் மகாஜனா அணியை புரட்டி எடுத்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 14:01 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றியீட்டியது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

பலமான சென். பற்றிக்ஸ் அணி, கடும் போராட்டத்தின் மத்தியில், 2:1 என்ற கோல்கள் கணக்கில் போட்டியில் வெற்றியீட்டியது. (க-26)

## அரசியலமைப்பை...

பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு நகல் வரைபு முன்வைக்கப்பட்டுள்ளதாக ஒரு சிலரும், அவ்வாறானதொன்று முன்வைக்கப்படவில்லை என்று ஒரு சிலரும் கூறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர இந்த பாராளுமன்றத்திற்கு பெரும்பான்மை இல்லை என்று மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷ பிரதமராக செயற்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவை சவாலுக்கு உட்படுத்தி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் நலின் பெரேரா, நீதியரசர்களான பிரியந்த ஜெயவர்தன மற்றும் எல்.டி.பி.தெஹிதெனிய ஆகிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த மேன்முறையீட்டில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 122 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்திருந்த சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விலக்கிக் கொள்வதற்கு தமது தரப்பினரிடம் ஆலோசனைகளை பெறவுள்ளதாக தெரியப்படுத்தினார்.

இதற்கு கால அவகாசம் வழங்குமாறும் சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றில் கோரினர். இதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ம-3)

## ஐ.நா. தீர்மானங்...

வித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் போது, இலங்கையில் அண்மைய அரசியல் நிலைமை பற்றி பேசப்பட்டதுடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30:1, 34:1 தீர்மானங்களை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவோம் என்றும் சபாநாயகருக்கு உறுதியளித்தார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரித்தானியாவிற்கான விஜயத்தை மேற்கொண்ட சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமைச்சர் மார்க் பீல்ட்டை சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மனிஷா குணசேகர சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.(ம-3)

## வடக்கிலிருந்து...

அதன் பின்னர் நாகவிகாரையின் விகாராதிபதி மீஹகாஜதுரே விமலதேரர் மற்றும் நயினாதீவு விகராதிபதி நமதகல பத்மகித்தி தேரர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறித்த கலந்துரையாடலின்போது வடக்கு மாகாணத்தில் நிலவும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் விசேடமாக குறிப்பிட்ட விகாராதிபதிகள், இளைஞர்களைத் தவறான வழிக்கு இட்டுச்செல்லும் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், வடக்கு மாகாண ஆளுநராக சுரேன் ராகவனை நியமித்தமையானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மிகச்சிறந்ததொரு தீர்மானமாகவே தான் பார்ப்பதாக குறிப்பிட்ட நாகவிகாரை விகாராதிபதி விமலதேரர், ஆளுநருடன் இணைந்து வடக்கில் மதங்களுக்கிடையில் நல்லுறவினை கட்டியெழுப்ப ஒன்றுபட்டு செயற்பட தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நேரடிக் கண்காணிப்பில் போதைப் பொருள் ஒழிப்பு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதுடன், ஜனாதிபதியின் இந்த செயற்திட்டத்துடன் இணைந்து வடக்கில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை, ஆளுநர் நேற்று யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அரசியலமைப்பு...

பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே, இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசியலமைப்பு திருத்தம் நாட்டை பிரிக்கும் முயற்சியாகும். ஒரு சிலர் இதனைத் திருத்தம் என்கின்றனர். ஒருசிலர் சட்டமூல வரைவு என்கிறனர். ஒரு சிலர் அப்படி ஒன்றும் இல்லை என்கின்றனர்.

ஒவ்வொருவராக தயாரித்த நான்கு அறிக்கைகள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 'அவர்களின் வேலைக்கான ஆரம்பத்தை வைத்துள்ளனர்.

அவர்கள் அதில் பிரச்சினை இல்லை என்று கூறிய நிலையில் அதனை வாசித்து பார்க்கும் போதுதான் பிரச்சினைகள் தெரிகின்றன.

இந்த பாராளுமன்றத்திற்கு புதிய அரசியலமைப்பினைக் கொண்டுவருவதற்கு அதிகாரம் இல்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. குறைந்தது 113 கூட இல்லைஎன அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## முன்னாள் புலி...

நீதிபதி மகேஷ் வீரமனினால், அவர்களை விடுவிக்க உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம், சங்கானையைச் சேர்ந்த பி.அரவிந்தன் மற்றும் வான் புலிகள் பிரிவின் முன்னாள் தலைவர் என்று கூறப்படும் ராசவல்லன் தவரூபன் ஆகிய இருவருமே ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 8 வருடங்களுக்கு பின் விடுவிக்கப்பட்டனர்.

அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றில் அவர்கள் இருவருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டனர். அதற்கமைவாக அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.

2007ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22ஆம் திகதி அதிகாலை எல்லாளன் நடவடிக்கை எனப் பெயரிடப்பட்டு அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. வான்வழித் தாக்குதல் மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குல் என்பன நடத்தப்பட்டன.

இதன்போது, இலங்கை பாதுகாப்பு படையின் 14 பேரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்கொலை குண்டுதாரிகள் 21 பேரும் கொல்லப்பட்டனர்.

சங்கானையைச் சேர்ந்த பி.அரவிந்தன் மற்றும் வான் புலிகள் பிரிவின் முன்னாள் தலைவர் என்று கூறப்படும் ராசவல்லன் தவரூபன் ஆகிய இருவரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

16 விமானங்களை அழித்து 400 கோடி ரூபாயை நட்டப்படுத்தியமை பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த 14 பேரைக் கொலை செய்தமை ஆகியவற்றுக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கி அவர்கள் இருவருக்கும் எதிராக அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றில் 2016ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. (ம-3)

## வடக்கு அபிவிருத்...

அபிவிருத்தி தொடர்பில் மேற்படி யோசனையை முன்வைத்தார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அபிவிருத்தி கைவிடப்பட்டிருந்ததினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார அடிப்படை வசதி மற்றும் சமூக அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வாதார நிவாரணத்தை வழங்கி அந்த பிரதேச அபிவிருத்தியை துரிதப்படுத்தும் பொருட்டு விசேட திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக விவசாயம், கைத்தொழில், கடற்றொழில் மற்றும் சேவைத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி இவற்றின் கீழான வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.

கிராமப் புற வீதிகள் தீவுகளில் வள்ளங்களுக்கான நங்கூரமிடும் இடங்கள் மற்றும் தரைப்பகுதிகளில் ஜெட் தீவுகள் மற்றும் பிரதான தரைநிலங்களுக்கிடையில் பிரவேசத்திற்கான வசதிகளை வழங்குதல், விவசாய உபகரணங்கள் விவசாயக் கிணறுகள் மீன்பிடி வள்ளங்கள் மற்றும் என்ஜின்கள், சுய தொழில் வாய்ப்புடன் தொடர்புபட்ட உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பம் சந்தை வசதிகள், களஞ்சியம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அடிப்படை வசதிகள் போன்ற வாழ்வாதார மற்றும் தொடர்புபட்ட ஏனைய வசதிகள் இந்த திட்டத்தின் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக பொருளாதார அடிப்படை வசதி, சமூக அடிப்படை வசதி, ஜீவனோபாயம் மற்றும் சுயதொழில் வாய்ப்பு மற்றும் சிறிய கைத்தொழில்கள் மற்றும் தொழில் முயற்சி போன்ற 4 துறைகள் ஊடாக இந்த திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதற்காக 2ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக தேசியக் கொள்கை பொருளாதார அலுவல்கள், மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு வடமாகாண அபிவிருத்தி தொழில் பயிற்சி திறனாற்றல் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அபிவிருத்தி அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-3)

## அரசியலமைப்பு...

புதிய அரசியலமைப்பு முயற்சிகளிற்கு பெரும் நெருக்கடியாக, புத்தசாசன செயலணி நேற்று அதிரடி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மகாநாயக்கர்களின் ஆசீர்வாதமில்லாத எந்த அரசியலமைப்பு வரைபையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க கூடாதென அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டிலுள்ள முக்கியமான மகாநாயக்கர்கள், சிங்கள புத்திஜீவிகளை உள்ளடக்கிய புத்தசாசன செயலணியின் 29 உறுப்பினர்கள் இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

மகாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதம் இல்லாத எந்த அரசியலமைப்பு வரைவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க கூடாது. தேவையானால் அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுவில் மகாநாயக்கர்களையும் உள்ளடக்கி ஒரு யோசனையை எட்டுங்கள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு முயற்சியில் இது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக கருதப்படுகிறது. அரசியலமைப்பை உருவாக்க முயற்சியை உடனடியாக கைவிடுமாறு பௌத்த பிக்கு ஒருவர் சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-3)

## புதிய அரசியல்...

சுமந்திரனிற்கு நேற்று புதன்கிழமை மாலை பருத்தித்துறை நகரில் வரவேற்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைக்கு கொடுக்கப்படுகின்ற அதிகாரங்கள் மீளப்பெற முடியாதவாறு இருக்கவேண்டும்.

அதாவது கொடுக்கப்படும் அதிகாரங்கள் குறித்து மத்திய அரசில் சட்டம் இயற்ற முடியாதவாறு அமைய வேண்டும்.

இவ்விடயங்கள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதனால்தான் நாங்கள் இதனை சமஷ்டிக்குரிய குணாம்சம் என்று கூறுகின்றோம்.

ஆகவே அரசியல் அமைப்பு மீறப்படுகின்ற போது அதனைத் தடுக்கவேண்டிய தேவை ஏனைய சமூகத்தைவிட எமது சமூகத்தில் அதிகமாக இருக்கின்றது.

இங்கு ஜனநாயகம் மீறப்படுகின்றபோது அதிகளவில் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள் தான். ஆனால் ஒட்டுமொத்தமாக நாட்டிலே ஜனநாயகம் மீறப்படுகின்றபோது எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியது அவரது கடமையாகும் என சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-60)

## இலங்கை - பிலிப்...

மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி ரொட்ரிகோ டியுடேர்ட்க்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று பிற்பகல் அந்நாட்டு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து அரச தலைவர்கள் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

முதலாவதாக இரு நாடுகளுக்குமிடையே பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் சார்பில் அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு திணைக்களத்தின் செயலாளர் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

அதனைத் தொடர்ந்து கைச்சாத்திடப்பட்ட இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான சுற்றுலாத்துறையினை மேம்படுத்துதல் பற்றிய உடன்படிக்கையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் சுற்றுலாத்துறை திணைக்களத்தின் செயலாளர் மற்றும் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

அடுத்ததாக இரு நாடுகளுக்கும் இடையிலான விவசாயத் துறையின் ஒத்துழைப்புகளை மேம்படுத்துதல் பற்றிய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அதேவேளை, பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் சார்பில் அந்நாட்டின் விவசாய திணைக்களத்தின் உதவிச் செயலாளர் வால்டோ காப்புறோ கைச்சாத்திட்டார். (ம-3)

### ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 16-01-2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 909 |

ஆங்கில எழுத்து: Y — வெற்றி இலக்கங்கள்: 6 5 0 6 5 9

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2019-01-16 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 102 |

Z 17 29 48 82

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2019.01.16 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2006 |

W 08 10 45 73

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 16/01/2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 332 |

I 05 31 36 63 64

தேசிய லொத்தர் சபை

## விபத்துக்குள்ளான...

கற்கும் தாவடி மேற்கு நந்தாவில் வீதியை சேர்ந்த பாலச்சந்திரன் கஜன் (வயது 12) என்ற மாணவனே மேற்படி உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம் நண்பகல் குறித்த மாணவனும் அவனது பெற்றோர் மற்றும் சகோதரியும் முச்சக்கர வண்டியில் இணுவிலில் இருந்து மல்லாகம் நோக்கி சென்றுள்ளனர். அப்போது இடது பக்கத்தில் இருந்து திடீரென வந்த முச்சக்கரவண்டி இவர்கள் பயணம் செய்த வண்டியுடன் மோதியுள்ளது. அதே நேரம் பொலிஸாரை ஏற்றி வந்த முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் குறித்த சிறுவன் மற்றும் அவனது தாயார் படுகாய மடைந்தது டன் பொலிஸார் உட்பட மூவர் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டனர்.

இந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9,101)


**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர் (Administration Officer)
பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

வயது :-18-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15000/-
V2 TRAVELS
16/1.மாநகரசபைக் கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
0768226243
v2vacancies@gmail.com
(C-5172)



ஆங்கிலம் / சிங்களம்
**Certificate course in English / Sinhala Diploma in English/ Sinhala**
>>> அடிப்படையிலிருந்து
>>> உங்களுக்கு வசதியான நேரங்களில்...
>>> அனைத்து வயதினருக்குமானது.
>>> Writing, Listening, Speaking, Reading
**British College of Higher Studies**
Stanley Road (லங்கா சதொச மேல் மாடி)
15, Sirambiyady lane, Jaffna.
**021 222 4550 / 076 138 0212**
(C-5171)



**பெண்களுக்கான வேலை வாய்ப்பு**

A/L படித்தும் தொழிலின்றி உள்ளவரா?
யாழ் நகரில் ஆசிரியராக விருப்பமா?
**தொடர்புகளுக்கு :**
**021 222 4550, 076 138 0212**
(C-5173)



**வீடு, காணி தேவை**

பலாலி றோட் வசாவிளான் பாடசாலைக்கும் உரும்பிராய்க்கும் இடைப்பட்ட பகுதியில் வீட்டுடன் அல்லது வெறும்காணி தேவைப்படுகிறது. காணி உரிமையாளர் தொடர்புகொள்ளவும்.
**தொடர்புகளுக்கு :**
**077 683 4296, 076 295 7018**
(7162)



**நீங்கள் வெளிநாட்டு முயற்சியாளர்களா?**

Student visa Migration visa ☞IELTS Academic/ General
Settlement visa ( ) ☞IELTS Life skill A1 Exam
**British College of Higher Studies**
Stanley Road (லங்கா சதொச மேல் மாடி)
15, Sirambiyady Lane, Jaffna. 021222 4550 / 076 1380212
(C-5171)



**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-5112)



**FLC FRENCH LANGUAGE CENTRE**

**பிரெஞ்சு**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி. ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி
181, பிரதான வீதி. நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 28.01.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-5113)



**பதவி வெற்றிடங்கள்**

யாழ் முன்னணி நிறுவனத்தில் 10க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள் உள்ளன. வடமாகாணத்தில் புதிய கிளைகள் ஆரம்பிக்க இருப்பதால் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
●தகைமை : O/L, A/L (O/L படிக்காதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்)
●வயதெல்லை : 18 - 35
●அனுபவம் அவசியமற்றது.
**தொடர்புகளுக்கு :**
**076 459 8925**
(7174)



**கூலி ஒப்பந்தக்காரர் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள 5 மாடி கட்டிடம் ஒன்றுக்கு மாபிள் (Tiles) பதிப்பதற்கு கூலி ஒப் பந்தக்காரர் தேவை.
**தொடர்புகளுக்கு :-**
**தொ.இல : 077 315 1500**
(C-5167)



**மருந்தக பணியாளர் தேவை**

மல்லாகத்தில் இயங்கவிருக்கும் மருந்தகம் ஒன்றில் பணிபுரிய விரும்பும் முன்னனுபவமுடைய அல்லது மருந்தாளர் சான்றிதழ் பயிற்சியை பெற்ற இருபாலாரும் தமது முழுப் பெயர், பால், வயது மற்றும் முகவரி என்பவற்றை 076 866 1986 எனும் இலக்கத்திற்கு குறுஞ்செய்தியாக (SMS) 20.01.2019 ற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
(7170)



**2019-ம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பு திட்டம்**

EPT நிறுவனத்தால் உங்களுக்கு அரியதொரு வாய்ப்பு. நீங்கள் 10ம் தரம், O/L,A/L படித்தவராயின் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.
முதலாம் மாதம் 15,000/= சம்பளத்தினையும் இரண்டு மாத அனுபவத்தின் பின்னர் 25,000/= வருமானத்தினையும் மூன்று மாத அனுபவத்தின் பின்னர் 30,000/= வருமானத்தினையும் பெற்றுக் கொள்ளலாம்.
அனுபவத்தின் பின்னர் உங்கள் வசிப்பிடத்திற்கு அருகாமையில் நிரந்தர வேலையினையும் 40,000 அடிப்படைச் சம்பளத்தினையும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்புகின்றவர்கள் தொடர்புகொள்ளவும்.
**தொடர்புகளுக்கு : 077 985 6671, 077 695 3242**
(7175)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
**Jaffna International Trade Fair**
10th EDITION
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
www.jitf.lk
jitf.lk
**JITF 2019**
**25 26 27 ஜனவரி January**
**10.00 am - 8.00 pm**
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna
PLATINUM SPONSOR: INSEE CEMENT
GOLD SPONSOR: Browns A Heritage of Trust
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY
OFFICIAL PARTNERS
HEALTH CARE: ASIRI HEALTH
FOOD
BANKING
TELECOMMUNICATION
FERTILITY CARE: NINEWELLS
ROOFING: iROOF
ONLINE MEDIA
PRINT MEDIA
SUPPORTED BY
ENDORSED BY
(7150)
More information: RIZWAN +773 959 835 | rizwan@saexhibitions.com


# மரண அறிவித்தல்

## கந்தையா தர்மகுலசிங்கம் (ரவி)

### (K.T.M.Oilmill உரிமையாளர்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட கந்தையா தர்மகுலசிங்கம் (14.01.2019) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**K.T.M.Oilmill**
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (7165)

தகவல் : குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.